விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 16 வியாழக்கிழமை (01.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 256

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# நிபந்தனையுடனான ஆதரவு

# ஜே.வி.பியின் முடிவு இன்று

## கட்சி வட்டாரங்கள் தகவல்

(நமது நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்னைகளுடனான ஆதரவு வழங்குவது தொடர்பான இறுதி முடிவை ஜே.வி.பி இன்று அறிவிக்கவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பியின் குழுவினருக்கும் இடையில் நேற்றும் நேற்று முன்தினமும் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன.

இன்று மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இன்றைய பேச்சுக்களின் போது இணக்கப்பாடு காணப்படும் இடத்து தமது நிபந்தனைகள் குறித்து அறிவிக்கப்படுமென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

முன்னைய பேச்சுக்களின் போது பிரதமரிடம் இருந்து சாதகமான முடிவுகள் தெரிவிக்கப்பட்டதாகவும் இதனால் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் ஜே.வி.பி.தெரிவித்தது.

இன்றைய பேச்சுக்களின்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் இருந்து சாதகமான முடிவுகள் தெரிவிக்கப்படும் பட்சத்தில் நிபந்தனையுடன் கூடிய புதிய கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து தீர்மானிக்கப்படும்என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கைகளை மீறி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டுச்சேருவாரானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்பதவியில்இருந்து அவர் இடைநிறுத்தப் படக் கூடுமென அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு (10 ஆம் பக்கம் பார்க்க)

## சனநெரிசலில் சிக்குண்டு 700 பேர் ஈராக்கில் பலி

(ஈராக்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சியாத் மதப்பிரிவு சடங்கு ஒன்றின் போது நேற்று புதன்கிழமை ஏற்பட்ட சனநெருசலில் சிக்கி 600க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளார்.

மொத்தம் பலியானவர்கள் பற்றி மாறுபட்ட எண்ணிக்கைகளை ஈராக்கிய அதிகாரிகள் வெளியிட்டு வருகிறார்கள்

700பேர் பலி என ஈராக்கிய உடல்நலத்துறை அமைப்பு தெரிவித்துள்ளது. இது தவிர வேறு மதிப்பீடுகளோ மேலும் அதிகமாகவுள்ளன. (10ஆம்பக்கம்பார்க்க)

## காணாமல் போன இளைஞன் நேற்று சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பிரதேசத்தில் 2 வாரங்களுக்கு முன்பு வீட்டிலிருந்து இனந் தெரியாத நபர்களினால் அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் போன இளைஞர் ஒருவர் நேற்று உருக்குலைந்த நிலையில் சடலமாக வாகனேரியில் மீட்கப்பட்டுள்ளார்.

புனானை முள்ளிவெட்டு வான்வாசியான செல்லத்துரை சுரேஸ் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இராணுவம் மீது தொடர் கைக் குண்டுத்தாக்குதல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை நடந்த கைக்குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இராணுவச் சிப்பாய்கள் 4பேரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதி மாவடி வேம்பு இராணுவ காவலரண் மீது நேற்றுக்காலை 6.20 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

காலை 7மணியளவில் வாழைச்சேனை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அருகில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மீது கைக்குண்டு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதிலும் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில்அருகில் உள்ள வீட்டில் இருந்த யுவதி உட்பட 4பேர் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் மகிந்த இணைந்துள்ளமை சமாதான முயற்சிகளுக்கு எதிரானது

### ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர்

(கிளிநொச்சி)

தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாக அரசு பேசவிரும்பின் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தான் பேசவேண்டுமென்பது யதார்த்தமானது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தான் வெற்றிபெற்றால் தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரனுடன் நேரடிப்பேச்சுக்களை நடத்துவேன் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் இருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் ஆயுதங்களுடன் ஆட்டோ ஒன்றில் சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, 3 ஏ ரகத்தைச் சேர்ந்த ரிவோலர்கள் என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் இரண்டு இளைஞர்களும் கொண்டு சென்ற ஆயுதங்கள் அவர்களுக்கு எதிரான பாதாள உலகக்குழுவினரை தாக்குவதற்காக கொண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் முஸ்லிம்களின் தனிநிர்வாகம் உறுதியளிக்கும் வேட்பாளருக்கு ஆதரவு

### முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்குப் பகுதியில் முஸ்லிம்களுக்கு தன்னாட்சி நிர்வாகம் அமைப்பதாக உறுதியளிக்கும் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கவுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கடந்த செவ்வாய் கிழமை ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் , கிழக்குப்பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு தன்னாட்சி . (10 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறும் இந்திய மீனவர்கள் சிறைப் பிடிக்கப்படுவார்கள்

### வடமராட்சி மீனவர்கள் எச்சரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதுடன் அட்டகாசம் புரியும் இந்திய மீனவர்களை கைதுசெய்வதுடன் அவர்களின் உடைமைகளையும் நாம் பறிமுதல் செய்வோம் என வடமராட்சி மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசத்தில் நேற்று நடைபெற்ற கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் அட்டகாசம் அதிகரித்ததை அடுத்து கடற்றொழிலாளர்கள் சமாசத்தால் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.அது தொடர்பாக கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர்கள் தமது எச்சரிக்கையை விடுத்தனர்.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த க.கா.குழுவின் பிரதிநிதி லாரன்ஸ் பெலிமன் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதை தான் நேரடியாகக் கண்டதாகவும் அது தொடர்பாக இலங்கை , இந்திய கடற்படையினரின் அதிகாரிகளைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (ச-35)

## அமெரிக்க குழு யாழ்.விஜயம்

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உயரதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டது.

நேற்று முன்தினம் பலாலி விமானப் படைத்தளத்திற்கு சென்ற அமெரிக்க உயரதிகாரிகள் அங்கு கண்ணிவெடி மோப்ப நாய்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து நாகர் கோவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் மயங்கி வீழ்ந்து மரணம்



(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற வயோதிபர் திடீரென மயங்கி வீழ்ந்ததில் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப வயோதிபர் திருநெல்வேலி சந்தியல் நின்றபோது திடீரென மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்ததில் அவர் உயிரிழந்தார். கோண்டாவிலைச் சேர்ந்த சுந்தரம் சுப்பிரமணியம் (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கோப்பாய்ப் பொலிஸார் மரண விசாரணையின் பொருட்டுசடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ச-8)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

# தேர்தலில் ஐ. தே. கவுடன் கூட்டணி அமைக்க இயலாது

## ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜாதிக ஹெல உறுமய நேற்று முன்தினம் நடாத்திய பேச்சுவார்த்தைகள் தோலவியில் முடிவடைந்துள்ளன.

அனைத்துப பிக்குகள் கட்சி ஜாதிக ஹெல உறுமய சார்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பேச்சு நடாத்தப்பட்டது.

இப பேச்சுவார்த்தைகள் குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயிவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்ற போதும் வலதுசாரி ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணியை உருவாக்க இயலாது எனத் தெரிவித்தார்.

இப் பேச்சுக்களில் ஜனாதிபதித தோத்ல் தொடர்பாக கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்து மட்டுமே விவாதிக்கப்பட்டன.

இதேவேளை, கட்ந்த திங்கட் கிழமை சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தோம். அப் பேச்சுக்கள் தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த முடியும். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் எமது உடன்பாட்டுக்கு உடன்பாடாகவே அமைந்தன.

எவ்வாறாயிருப்பினும் இரண்டு வேட்பாளர்களுடனான பேச்சுக்கள் தொடர்பான இறுதி முடிவுகளை எதிர்வரும் 4ஆம் திகதி வெளிப்படுத்துவோம் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தா. (4,8)

# கதிர்காமர் படுகொலை தொடர்பில் மனைவியை விசாரிக்காதது ஏன்?

## இராணுவத் தரப்பு கடும் விசனம்

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு விசாரணையில் புதிய திருப்பமாக கதிர்காமரின் மனைவி சுகந்தி கதிர்காமரிடம் ஏன் இதுவரை விசாரணை நடத்தவில்லை என்று இராணுவத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கதிர்காமர் கொலை வழக்கு விசாரணையை நடத்திவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பாதுகாப்புக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி இராணுவத்தினர் மீது குற்றம்சாட்டி வருவதாக இராணுவத்தரப்பீனர் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களே கதிர்காமரின் இல்லப் பாதுகாவலர்களாக இருந்துள்ளனர். கடந்த 2001ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம திகதி முதல் பொலிஸாரிடமிருந்து பாதுகாப்புப் பிரிவிற்கு இப் பொறுப்பு மாற்றப்பட்டுள்ளது. பாதீகாப்புப் பிரிவைச் சேர்ந்த இருவர் கொலை நடந்தபோது கதிகாமரின் இல்ல வாயிற்கதவு முன்பு இருந்துள்ளனர்.

கதிர்காமரின் அருகாமை இல்லமான தளையசிங்கம் வீட்டில் 4நாட்கள் கொலையாளிகள் தங்கியிருந்தே இச் சம்பவத்தை நிகழ்தியுள்ளனர் என்று கூறப்படும் நிலையில் பாதுகாப்புப் பிரிவினர் அந்த 4 நாட்களும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தது ஏனென்று பொலிஸார் கேள்வி எழுப்புகின்றனர். இந்நிலையில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோர் மீது கதிர்காமரின துணைவியார் சுகந்தி கதிர்காமர் பலமுறை பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார். மேலும் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவருடன் இருந்தவர் சுகந்தி கதிர்காமர். அப்படியானால் அவரை விசாரணைக் குட்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதுவரை விசாரணைக் குட்படுத்தவில்லை. 25 இராணுவ கொமாண்டர்களை விசாரணைக் குள்ளாக்கியிருக்கும் பொலிஸாரினால் ஏன் சுகந்தி கதிர்காமரை விசாரணைக்குட்படுத்த முடியவில்லை? என்று இராணுவத் தரப்பினர் விசனமடைந்துள்ளனர்.

இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தும் நோக்கத்திலேயே பொலிஸாரின் விசாரணை திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்றும் இப்படியான திட்டமிட்ட குற்றச்சாட்டில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஒரு இராணுவ கொமாண்டோ விசாரணையின் போதே வெளிநடப்பு செய்துவிட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கதிர்காமர் கொல்லப்படுவதற்கு 3 வாரங்களுக்கு முன்பாக அவரது இல்லம் வீடியோப் படம் எடுக்கப் பட்டதாக செய்திகள் வெளியானது. இதுகுறித்த அனைத்து விவரங்களையும் தனக்கு அனுப்பிவைக்குமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிடம் கதிர்காமர் கோரியுள்ளார். இது தொடர்பான விவரங்களையும சந்திரா பெர்னாண்டோ கதிர்காமரிடம் கொடுத்துள்ளார். ஆனால அது தொடர்பில மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தும் வகையிலேயே பொலிஸாரின் வசாரணை இருப்பதாக இராணுவத்தரப்பு கடும் அதிருப்தியில் இருப்பதாக தென்னிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

# தபாலகம் அமைப்பதற்கு — காணி வழங்குமாறு கோரிக்கை

(பொன்னாலை)

மானிப்பாய் தபாலகம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. இதற்கு நிரந்தர கட்டடம் ஒன்று நிறுவுவதற்கு காணி இல்லையெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தபாலகம் அமைப்பதற்கு நிரந்தர காணி ஒன்றைப் பெறுவது தொடர்பாக வலி-தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அடிக்கடி ஆராயப்பட்டு வருகின்றது.

அணமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மனிப்பாய் பிரதேச சபைக்கு சொந்தமான காணி ஒன்று பயன் பாடற்ற விதத்தில் இருக்கின்றது என்றும் அதனை தபாலகம அமைக்க பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறப பட்டது.

இந்நிலையில் மானிப்பாய் பிரதேசசபை செயலாளரிடம் குறித்த காணியை தபாலகம் அமைப்பதற்கு நன்கொடையாக வழங்கி உதவுமாறு வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் என். ஜெயரத்தினம் கேட்டுள்ளார். (ந-49)

# இராசி பலன்

**01.09.2005**
**(ஆவணி 16, வியாழக்கிழமை)**
**திரயோதசி முன்னிரவு 9.30 மணிவரை**
**பூசம் முன்னிரவு 12.32 மணிவரை**
**இராகுகாலம் 1.35 - 3.05 மணிவரை**
**சுபநேரம் 7.35-9.05 மணிவரை**
**பிரதோச விரதம்**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், வேலைச் சுமை, தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| இடபம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, அன்னியர் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | மதிப்புக் குறைவு, காரிய தாமதம், பண விரயம், போசன சுகம். |
| கடகம் | நண்பர்கள் உதவி, ஜனவசியம், சயன சுகம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | பிதாசிந்தை, சுப செலவு, நித்திரைக் குறைவு, பிரயாணம். |
| கன்னி | தெய்வதரிசனம், தொழில் சிந்தை, புகழ், காரிய நன்மை. |
| துலாம் | சுபநிகழ்வு, முயற்சி கைகூடும், உற்சாகம், பிறர் உதவி. |
| விருச்சிகம் | ஆன்றோர் மதிப்பு, புதிய திட்டமிடல், வயிற்றுக்குக் கோளாறு, அச்சமான நிலை. |
| தனுசு | அபகீர்த்தி, உறவினர் வெறுப்பு, பிரயாண பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | தெய்வ தரிசனம், குடும்ப மகிழ்ச்சி, அபூர்வ சந்திப்பு, போசன நன்மை. |
| கும்பம் | பகைவர் நேசம், அற்பர் உறவு, காரிய அனுகூலம், நல்ல செய்தி. |
| மீனம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, தெய்வசிந்தை, பண விரயம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# கதிர்காமரின் படுகொலைக்கு நோர்வே-ஐ.தே.கவே பொறுப்பு

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



விடுதலைப் புலிகள் தங்களுக்கான சலுகைகளை பெற்றுக் கொள்கின்றனர்.

(கொழும்பு)

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைக்கு நோர்வேர் அனுசரணையாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் தான் பொறுப்பேற்க வேண்டும் என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

குளியாப்பிட்டியவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் மட்டுமே பின்பற்றுகிறது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் பல புலனாய்வு உறுப்பினர்கள், பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு தற்போது வெளிவிவகார அமைச்சரும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கண்காணிப்புக்குழுவோ மேற்கத்தேய நாடுகளோ கொலைகள் பற்றி ஒரு வார்த்தையேனும் கூறவில்லை. எனினும், விடுதலைப் புலிகளுக்கு ஏதேனும் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இன்று நாடு ஒருபுறம் விடுதலைப் புலிகளின் பொறியில் சிக்கியுள்ளது. மறுபுறம் கடன் வழங்கும் நிறுவனங்களின் பிடியில் சிக்கியுள்ளது. அவர்கள் ஊடாக விடுதலைப் புலிகள் தங்களுக்கான சலுகைகளை பெற்றுக் கொள்கின்றனர்.

நோர்வேத் தரப்பினரால் எவ்வித பயனுமில்லை. இனி அவர்கள் போகவேண்டியது தான் எனறு சந்திரிகாவின் பிறந்தநாளில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருந்தார்.

அன்று முதல் பலரது பிரதான இலக்காக லக்ஷ்மன் கதிர்காமர் மாறினார். வெளிவிவகார அமைச்சரின் மீது ஐக்கிய தேசியக் கட்சி சேறு பூச ஆரம்பித்தது. அவரின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து பாராளுமனறத்தில் கேள்வி எழுப்ப ஆரம்பித்தது. வெளிவிவகார அமைச்சரின் மரணத்திற்கு நோர்வே உட்பட சமாதான வியாபாரத்தில் ஈடுபடும் மேற்கத்தேய நாடுகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் பெறுப்பேற்க வேண்டும் என்வும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

# இம்முறை தேர்தல் வன்முறைகள் அதிகரிக்கும் என பவ்ரல் அச்சம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கடந்தகால தேர்தல்களை விட வன்முறை நடவடிக்கைகள் அதிகரிக்லாம என பவ்ரல் அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ கருத்து வெளியிடுகையில், இலங்கையில் குறிப்பிட்ட பல மாவட்டங்களில் பிரதான வேட்பாளாகள் சார்ந்த கட்சி ஆதரவாளர்களுடைய வன்முறைகள் எனத் தெரிவித்துள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் முன்னிலையிலேயே வன்முறைகள் இடம்பெற்றதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும், இந்தத் தேர்தல் வன்முறை இடம்பெறாவண்ணம் கூடிய கவனதத்தினை தமது அமைப்பு செலுத்துவதாகக் குறிப்பிட்ட அவர், அதற்கான ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ந-2)



சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கலாபூசணம் சு.துரைசிங்கம் அவர்களின் பாலர் கணித செயல்நூல் அறிமுகவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சூ.ஜெயராஜ் முதல் பிரதியை எழுத்தாளர் அ.தம்பித்துரை அவர்களுக்கு வழங்குவதையும், நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் அருகில் விழாத் தலைவர் இ.அரிகரன் நிற்பதையும் முன்பள்ளி யாழ்.மாவட்ட இணைப்பாளர் செல்வி கு.அன்சலின் சிறப்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# மூன்று வருடத்தில் 15000 பேர் தாதிச் சேவையில் உள்ளீர்ப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு தொடக்கம் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் தோற்றி சித்திபெறும் மாணவ,மாணவியரை தாதிச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

தற்போது தாதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்களைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பதுளையில் அமைந்துள்ள தாதிப் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெற்றிடங்களை நிரப்புவதற்காக அடுத்த மூன்று வருட காலப்பகுதியில் 15 ஆயிரம் பேருக்கு தாதி சேவை நியமனங்கள் வழங்கப் படவுள்ளன.

இவ் வருடம் 5 ஆயிரம் பேரை சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிட்டிருந்தாலும் இதுவரை 4ஆயிரம் விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத திருபபதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் தாதிச் சேவையை மேம்படுத்து வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அந்த சேவையின் கௌரவத்தை பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்டமூலத் திற்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைத் துள்ளது. மேலதிக மருத்துவசேவைகளில் இணைந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு விஞ் ஞானத்துறை சார் பட்டப்படிப்பு கற்கைநெறி களைத் தொடரும் வாய்ப்பு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# ஜே.வி.பி- பிரதமர் இணைவது நாட்டுக்கு அனுகூலமாகும்

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜ பக்ஷ சர்வதேச அழுத்தங்களுக்கு அடி பணி யாமல் சுயாதீனமாக நடந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித் துள்ளது.

தறபோதைய பிரதமர் ஜே.விபியுட்ன் சரியான கொள்கை உடன்படிக்கையில இணைந்து கொள்வாரானால் அது பொதுத் தேர்தலில் நாட் டுக்கு அனுகூலமாக அமையும் என்று அவ் வமைப்பு கடந்த திங்கட்கிழமை வெளியிட் டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பி பிரதமருடன் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்து வருவது எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

பிரிவினைவாத பயங்கரவாத வெளிநாட்டு பசுமைக்குழுக்கள் ஜனநாயக தேர்தலுக்கான ஒரு தரப்பில் இணங்கியிருப்பதால் அவற்றுக்கு எதிரான அமைப்புக்கள் தமக்கிடையே பொது இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.(ந-4)

# தமிழ் ஊடகங்கள் மீது— விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தல்

## 'சுடர் ஒளி' மீதான தாக்குதலுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

சுடர்ஒளிப் பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்கள் இலங்கையில் தமிழ் ஊடகங்களுக்கு விடுக் கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் என தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள கண் டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்களை தடுத்து நிறுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அரசாங்கத்திடம் இவ் ஒன்றியம் பகிரங்கமாகக் கோரியுள்ளது.

சுடர்ஒளிப் பத்திரிகை அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஊடகத்துறைக்கு விடுக்கப்பட்ட ஒரு கடுமையான எச்சரிக்கையா கவே தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கருது கின்றது.

கடந்த காலங்களில் தமிழ் ஊடகத்துறை மீது நடத்தப்பட்ட தாக்குதலகள் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்படாத காரணத்தினாலேயே நிலமை இந்தளவு மோசம டைந்துள்ளது.

தமிழ் ஊடகத்துறை மீது நடத்தப்படும் இவ வாறான தாக்குதல்கள் நாளை சிங்கள ஊடகத் துறை மீதும் கட்டவிழ்த்து விடப்படலாம என வும் அவ் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ந-2)

# 'சுடர் ஒளி' மீதான தாக்குதலுக்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(திருகோணமலை)

சுடர்ஒளிப் பத்திரிகை மீது தொடுக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்து அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது.

ஊடகங்கள் மீது குறிப்பாக தமிழ் ஊட கங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் எதிர்காலத்தில் உருவாகவுள்ள மோசமான கூட்டணி ஒன்றின் சதியா? என்பது பற்றி சந்தே கிக்க வேண்டியுள்ளது.

இந்த மிலேச்சத்தனமான தாக்குலுக்கான பொறுப்பை இதுவரை அடையாளம்காணமுடியா விட்டாலும் இதை யார் செய்திருப்பார்கள் என்று? பல சந்தேகங்களைக் கொள்ள வேணடியுளளது.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வரும் சந்தர்ப் பத்தில் தமிழ் ஊடகங்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் குறைக்கவும் ஊடக சுதந்திரத்தை ஒடுக்கவும் தெற்கில் உள்ள இனவாதக் குழுவொன்று இந்தத் தாக்குதலைத் தொடுத்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இவ்வாறான தாக்குதல்கள் ஜனாதிபதித் தோதலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜ பகஷவிற்கு எதிரான சக்திகளுக்கு நன்மையா கவே இருக்கும் இனவாதிகளுக்கு இது பய்ன் தரப் போகிறது.

இவ்வாறான தாக்குதல்களுக்கு அஞ்சாமல் இனங்களுக்கிடையேயான நல்லெண்ணத்தை, உறவைப் பாதுகாக்குமாறு சம்பந்தப்பட்ட தரப் பினரை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தில் பாதிக் கப்பட்டவர்களுக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன் இனங்களுக்கிடை யிலான ஒற்றுமையைக் குறைக்க எவருக்கும் அனுமதி வழங்கப் போவதில்லை.

அதேபோல் இந்தத் தாக்குதல் குறித்து முழுமையான விசாரணைகளை நடாத்துமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கும் பணிப்புரை விடுக் கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ந-2)

# திருமலையில் 6 பேர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை கந்தளாய்ப் பகுதியில் கடற்புலிகள் இருவர் உட்பட ஆறு பேர் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்த னர்.

முச்சக்கரவண்டியில் பயணம் செய்த இவர்களிடமிருந்து 2இலட்சம் ரூபா கைப்பற் றப்பட்டதாகவும் இவர்கள் ஏற்கனவே பெரு மளவு பணததுடன் தலைமறைவாகியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒரு வரைத் தேடியே வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாட்டுக் கம்பனி பரிசீலனை

(கொழும்பு)

உலகின் முதலாந்தர கட்டட நிர்மாணக் கம்பனியான வெஞ்சி கொன்றக்சன் இலங்கை யில் முதலீடு செய்யும் வாய்ப்புக்களை பரிச லித்து வருகிறது.

பிரான்ஸிலிருந்து செயற்படும் இந்தக் கம்பனி பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங் களை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணக் கம்பனியில் உத்தியோ கத்தர்கள் இலங்கையில் கட்டட நிர்மாணப் பணிகள் பற்றி அமைச்சர்களுடன் பேச்சுக் களை நடாத்தியுள்ளனர்.

இந்தக் கம்பனியின் பிரதிநிதிகள் ஒக்டோபர் மாதத்தில் இலங்கை வரவுள்ளனர்.

இநதக் கட்டட நிர்மாணக் கம்பனி ஆசியா வில் பல கிளைகளைக கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## நல்லூர் ஆலயச்சூழலில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெற்று வரும் கந்தபுராணம் தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6.00மணிக்கு கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்த சர்மா 'இரணியன் வதம்' என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ந-9)

# பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நிவாரண வசதிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட ஊட கவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் உலகத்துறை அமைச்சின் நடவடிக்கைகள் திறைசேரியினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட் டுளளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசா ரணைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப் படையில் அமைச்சரது அங்கீகாரம் கிடைக் கபபட்டதைத் தொடர்ந்து பல அமைச்சுக்களும் திணைக்களங்களும் இத்தகைய நிவாரணக் கொடுப்பனவுகளை ஏற்கனவே வழங்கியுள் ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,அரச ஊடக நிறுவனங்களில கடமையாற்றும் ஊழி யர்கள் நிதியமைச்சர் சரத் அமுனுகம நேரடியாக தலையிட்டு இந்த நிவாரணக் கொடுப்பனவை தங்களுக்கு பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7)

# எரிபொருள் விலை அதிகரிக்கும்?

(கொழும்பு)

உலக சந்தையில் எண்ணெய் விலை அதி கரித்துள்ளமையை அடுத்து இலங்கையிலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்று 70 டெலராக அதிகரித் துள்ளது.

இலங்கை மசகு எண்ணெயை கொள்வனவு செய்கின்ற நாடுகளில் விலை உயர்வுகள் ஏற் படாத போதும்பொதுவான உலக சந்தையில் இந்த விலை ஏற்பட்டுள்ளது. எனவே அது இலங்கையின இறக்குமதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரி வித்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் விலை உயர்வுக்கு ஏற்ப தமது கூட்டுத்தாபனத்திற்கு நிவாரணத்தை வழங்காவிட்டால் எரிபொருளின் விலை அதிகரிக் கப்படும் என பெற்றோலியக கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார். (ந-7)



கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மணிமேகலைப் பிரசுர நிலையத்தினர் வெளியிட்ட நூல்களில் எழுத்தாளர் அ.தம்பித்துரை எழுதிய 'ஈரமில்லா இதயம்' சிறுகதை நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரியர் எம்.பாலசுப்பிரமணியம் பெறுவதைப் படத்தில் காணலாம்.



பருத்தித்துறை சிவன் கோவிலில் நடைபெற்ற அம்மன் திருவிழாவின் போது அம்மன் தேர் ஏறிவரும் காட்சியைப் படத்தில் காணலாம்.

(படம்:மருதங்கேணி செய்தியாளர்)

## இன்று ஒரு தகவல்

# இதயத் துடிப்புமானி

1816ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒரு மருத்துவமனை அங்கே ஒரு இளம் டாக்டர். சில நாட்களுக்கு முன்புதான் அவர் அங்கு வேலைக்குச் சேர்ந்திருந்தார். அவர் அன்று காலையில் அந்த மருத்துவமனையில் விடுதி நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார்.

ஒரு வாட்டிலுள்ள படுக்கை ஒன்றில் ஒரு இளம்பெண் படுத்திருந்தாள். அந்தப் பெண்ணுக்கு இருதய நோய இருக்கலாம் என்பது மற்றைய மருத்துவர்களின சந்தேகம். அந்தக் காலத்திலெல்லாம் ஒருவரது இதயத் துடிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நோயாளியின் மார்பில் டாக்டர் காதை வைத்துப் பார்த்துத்தான் தெரிந்து கொள்வார்கள்.

ஆனால் இந்தப் பெண்ணோ இளம்பெண். அந்த டாக்டரும புதிதாக வேலைக்குச் சேர்ந்திருப்பவர். அதனால பரிசோதனை செய்யத் தயங்கினார். சிறிதுநேரம் யோசித்தார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை வந்தது. அன்று விடியற்காலையில் தோட்டத்தில் நடந்துகொண்டிருந்த போது இரண்டு சிறு பிள்ளைகள் ஒரு மரக்கட்டையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.அது ஒரு நீளமான மரப்பலகை. அதிலுள்ள ஒரு முனையில் ஒரு சிறுவன் தன் காதை வைத்துக் கொண்டிருந்தான. மறுமுனையில் இன்னொரு சிறுவன் அந்தப் பலகையை ஒரு ஆணியால் கீறிக் கொண்டிருநதான். ஒரு முனையில் ஆணியால் கீறும் போது மறுமுனையில் காதை வைத்திருக்கும் சிறுவனுக்கு அந்தச் சத்தம் துல்லியமாகக் கேட்டது.

அநத டாக்டர் காலையில் பார்த்த இந்த விளையாட்டு நினைவுக்கு வந்தது. உடனே என்ன செய்தார் தெரியுமா? ஒரு நீளமான காகிதத்தை எடுத்தார். அதை உருளை போல் செய்தார். ஒரு முனையை அந்த நோயாளியின் மார்பில் இடது பக்கம் வைத்தார். இன்னொரு முனையில் தனது காதை வைத்தார். என்ன ஆச்சரியம்? நோயாளியின் மார்பில் நேரடியாகக் காதை வைத்துக் கேட்பதை விட துல்லியமாகக் கேட்டது இதயத் துடிப்பு இதயத்துடிப்பு மட்டுமல்ல மூச்சு இழுத்து விடுவது,திரவப் பொருட்களின் அசைவு என எல்லாச் சத்தமும் தெளிவாகக் கேட்டது.

கிரேக்க மொழியில 'ஸ்டெத்தாஸ்' என்றால் மார்பு! ஸ்கோப்பின என்றால் பார்ப்பது என்று அர்த்தம். அதனால் டாக்டர் தான் கண்டுபிடித்த கருவிக்கு 'ஸடெதஸ்கோப்' என்று பெயர் வைத்தார். அவரே முதல் மொடலையும் செய்தார். அளவு மிகவும் பெரிதாக இருந்தது. சுலபமாக எடுத்துக்கொண்டு போகச் சிரமமாக இருந்தது.

அதனால் அவரே அதை இரண்டு பிரிவாகத் தயார் செய்தார். இவையிரண்டையும் டாக்டர் தனது கோட் பொக்கற்றில் வைத்துக் கொள்ளலாம். தேவைப்படும் போது எடுத்து ஒன்றாக சேர்த்துக் கொள்ளலாம்.

தனது இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றி அவர் ஒரு புத்தகம் எழுதினார். நிறைய விற்பனையானது. பணமும் புகழும் சேர்ந்தது. பணமும் புகழும் வந்து சேர்ந்தது போலவே அவருக்கு நோயும் வந்து சேர்ந்தது. அது என்ன நோய் எனறு கண்டுபிடிப்பதற்கு அவர் கண்டுபிடித்த கருவிதான் உபயோகப்பட்டது. அவரே அதைக் கண்டுபிடித்தார். அவருக்கு வந்தது காச நோய்.

1826 ஆம்ஆண்டு ஒகஸ்ட் 13ஆம் திகதி உலகின் முதல் ஸ்டெதஸ்கோப்பைக் கண்டுபிடித்த டாக்டர் காலமானார். அவர் சாவதற்கு முன்பு மரத்தினால் செய்து வைத்திருந்த ஸ்டெதஸ்கோப்பைத் தனக்கு வேண்டப்பட்ட ஒரு டாக்டரிடம் கொடுத்து எனது சொத்துக்களிலேயே மிக உயர்ந்தது இது என்று சொன்னார்.

அதன்பின் மூன்று வெள்ளைக்காரர்கள் சேர்ந்து இந்தக் கருவியில் சில மாற்றங்கள் செய்தனர். ஆனால் 1829ல் லண்டனில் டாக்டர் நிகோலஸ் என்பவர் ஒரு காதால் இதயத் துடிப்பைக் கேட்பதை விட இரு காதாலும் கேட்பது தான் சரியாக இருக்கும் என்று ஒரு கருத்தை வெளியிட்டார். அதன்பின் நீண்டகாலம் கழித்து 1852 இல் ஜோர்ஜ் கமன் என்பவர் ரப்பர் டியூப்களை உபயோகப்படுத்தி இரண்டு காதாலும கேட்பது போல் புதிய வடிவம் கொடுத்தார். அதன்பின் அதில் படிப்படியாக எவ்வளவோ மாற்றங்கள். இருந்தாலும் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட மொடலை யாரும் மாற்றி அமைக்கவில்லை.

நமக்குத் தெரிந்த ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி காலை வேளையில் 'நர்ஸ்! நர்ஸ்' என்று கத்தினார். நர்ஸ் அவசரமாக ஓடிவந்து 'என்ன விஷயம்?' என்று கேட்டார். 'சிஸ்டர் இங்கே பாருங்கள் உங்கள் டாக்டர் என் நெஞ்சில் அவர் காதை வைத்துக் கொண்டிருக்கிறார்' என்றார்.

சிஸ்டர் பதற்றப்படாமல் 'அதனால் என்ன? இந்த டாக்டர் பழமையான விடயங்களில் மிகவும் நம்பிக்கை உள்ளவர் அதனால் ஸ்டெதஸ்கோப்பை உபயோகப்படுத்தாமல் காதை வைத்துக் கேட்கிறார். அதனால் என்ன?" என்றார். 'ஐயோ அதற்காக இல்லை சிஸ்டர் இவர் என் நெஞ்சில் தலை வைத்தது நேற்றிரவு 9மணி. இன்னும் தலையை எடுககவில்லை. அதனால் தான் உங்களைக கூப்பிட்டேன்' என்னவென்று பாருங்கள் என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# கொழும்புவரும் வட-கிழக்கு தமிழர்களின் நிலை அபாயகரமாக மாறியுள்ளது

## சுட்டிக்காட்டுகிறார் மகேஸ்வரன் எம்.பி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து கொழும்புககு வரும் தமிழ் இளைஞர்,யுவதிகள் காணாமல் போவதும் கொலை செய்யப்படுவதுமான அபாயநிலை எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரி. மகேஸ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.



விஷேட அறிககை ஒன்றை விடுத்து உரையாற்றிய மகேஸ்வரன் இவ்வாறு காணாமல் போகும் தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பாக அரசாங்கம் உரிய அறிக்கை ஒன்றை விடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இவவாறு காணாமல்போவது தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தமக்குத் தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக மகேஸ்வரன் குறிப்பிட்டுளளார்.

அண்மையில் களுத்துறை தெடுவனைப் பகுதியில் கொலை செய்யப்பட்டுப் போடப்பட்டிருந்த இளைஞர்கள் இருவரும் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்நதவர்கள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் தமது சகோதரியை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து மீண்டும் திரும்பிச் சென்ற போது வானில் வந்த சிலர் கடத்திச் சென்றுள்ளமை குறித்துத் தகவல் கிடைத்துளளதாக பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தமிழ் மக்களின் சுதந்திரமான கருத்துக்களைக் கூறுவதற்கான உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

சுடர் ஒளிப் பத்திரிகை அலுவலகத்திற்கும் அதன் ஆசிரியருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று சந்திரசேகரன் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பத்திரிகையைச் சுதந்திரமாக நடத்திச் செல்லும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.



இந்தச் சம்பவம் குறித்துப் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினா சுரேஷ் பிறேமச்சந்திரன் தொிவித்துள்ளார்.

இது தமிழ் ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-2)

# ஜெயா எம்.பிக்கு கொலை மிரட்டல் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினா எஸ். ஜெயானந்தமூர்த்திக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரவு வேளையில் வீட்டுக்கு மேலதிக பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு சில தினங்களாக தொலைபேசி மூலமாக கொலை மிரட்டலும் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டு வந்ததுடன் வாழைச்சேனையில் தங்கியிருந்த வேளையில் அவரின் வீட்டிற்கு சமீபமாக சிலர் துப்பாக்கியுடன் இரவு வேளையில் நடமாடியுள்ளாகள். இது தொடர்பாக அயலவர்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இதேவேளை, அரச வானொலி ஒன்றில் இடம்பெறும நிகழ்ச்சி ஒன்றில் குண்டுகள் தயாரிப்பதற்கும் தாக்குதல்கள் நடாத்துவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி உதவுவதாகவும் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

முன்பும் இதுபோன்று பல அச்சுறுத்தல்கள்,கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பத்திரிகைகள்,ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மன்னார் தமிழ் தேசிய — எழுச்சி மாநாடு ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னாரில் சனிக்கிழமை நடைபெறவிருந்த தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மன்னாரில் நடைபெற்ற பொது அமைப்புக்களின் கூட்டத்திலேயே இந்தத் தீமானம் எடுக்கப்பட்டதென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டின் தீமானங்களை வலியுறுத்தி மன்னாரில் நடைபெறவுள்ள மாநாடு தொடர்பாக ஏற்பாடுகளைக் கவனிக்கும் குழு ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்ட போதே இந்தத் தீமானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சியில் இன்று தமிழ்த் தேசிய மாநாடு பொது விளையாட்டு மைதானத்தில் மாலை 3 மணிக்கு நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாடுகளைக் கவனிக்கும் குழு தெரிவித்துள்ளது. (ற-4)

# ஆசிரிய சேவையில் பட்டதாரி உள்வீர்ப்பு; அடுத்த மாதத்துடன் திட்டம் பூர்த்தி

(கொழும்பு)

பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்கும் திட்டத்தின் முதற்கட்டம் அடுத்த மாதத்தில் பூர்த்தியாக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற்கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் அனைத்து பட்டதாரிகளுக்கும் அடுத்த மாதம் 15ஆம் திகதி அளவில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் தேசிய மாகாணசபை பாடசாலைகளில் 17 ஆயிரம் பட்டதாரிகள் நியமனம் பெறவிருப்பதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். எல்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நியமனக் கடிதங்களை அஞ்சல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தா.பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்கிக் கொள்வது தொடர்பான விசேட நிகழ்வு அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை தாங்கவுள்ளார்.

முதற்கட்டத்தில் எஞ்சும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள பட்டதாரிகள் குழுவொனறை சேர்க்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துளளார். (ற-7)

# இவ்வாண்டின் 6 மாத காலப்பகுதியில் — பொலிஸாருக்கு எதிராக 1300 முறைப்பாடுகள்

(கொழும்பு)

2005ஆம் ஆண்டின் முதல் 6மாத காலப்பகுதியினுள் மாத்திரம் பொலிஸாருக்கு எதிராக பொதுமக்களிடம இருந்து ஆயிரத்து 300 முறைப்பாடுகள் பொலிஸ ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்படும் என்று தேசிய ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களமும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் இணைந்து விசாரணைகளை நடத்துவதால் அவை நேர்மையாகவும் துரிதமாகவும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் தேசிய ஆணைக்குழுவின் தலைவர் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டதாவது,

இலங்கை அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பொதுமக்களினால் பொலிஸாருக்கு எதிராகச் செய்யப்படும் முறைப்பாடுகள் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு வரும் போது குறிப்பாக பாரிய குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராயும் கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

அதற்கான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனுபவம் வாய்ந்த விசாரணையாளர்கள் தற்சமயம் பொலிஸ் ஆணைக்குழுவிடம் இல்லை இதன காரணமாக விசேடமாக பயிற்றப்பட்ட இருவரை ஆணைக்குழுவிற்கு தற்காலிகமாக தந்துதவுமாறு பொலிஸ்மா அதிபரை வேண்டியிருந்தோம்.

ஆனால், ஆச்சரியத்தைக் கொடுக்கும் வகையில் இருவரைத் தற்காலிகமாக வழங்க பொலிஸ்மா அதிபர் மறுத்துள்ளார்.

இருந்தபோதிலும் பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டு குறித்து துணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரி பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு சென்று உரிய தகவல்களைப் பெறுவதற்கு பொலிஸ்மா அதிபர் அனுமதியளித்துள்ளார் எனவும் தேசிய ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (து-9)

# 'சுடர் ஒளி' மீதான தாக்குதல்; பொலிஸார் துரித விசாரணை

(கொழும்பு)

சுடர் ஒளிப் பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொளளப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளே இந்தத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல் மூலம் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டுளளார். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தாக்குதலை மேற்கொண்டவர்களை அடையாளம் காணமுடியுமென்று கூறியதாக பொலிஸாரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

## உடுவில் உதவி அரச அதிபர்பிரிவு

**உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் மிகுதிப் பெயர் விபரம் வருமாறு:-**

803.யா/உ_/5724 திரு. செல்லையா இரத்தினசிங்கம்
804.யா/உ_/5727 திரு. தம்பு வைத்திலிங்கம்
805.யா/உ_/5733 திருமதி. கனகம்மா ஆறுமுகம்
806.யா/உ_/5737 திரு. சீனிவாசன் பொன்னுத்துரை
807.யா/உ_/5739 திருமதி. பூரணப்பிள்ளை செல்லப்பா
808.யா/உ_/5743 திருமதி. மனோகரி சிவப்பிரகாசம்
809.யா/உ_/5750 திரு. சிற்றம்பலம் சாம்பசிவம்
810.யா/உ_/5751 திருமதி. சின்னம்மா இராசேந்திரம்
811.யா/உ_/5755 திரு. தம்பிப்பிள்ளை இராசரத்தினம்
812.யா/உ_/5772 திரு. சின்னத்தம்பி வடிவேலு
813.யா/உ_/5777 திரு. ஆறுமுகம் தம்பியப்பா
814.யா/உ_/5784 திரு. நடராசா தில்லைநாயகம்
815.யா/உ_/5786 திருமதி. இராசம்மா சிவலிங்கம்
816.யா/உ_/5799 திருமதி. நாகம்மா பொன்னுத்துரை
817.யா/உ_/5800 திரு. பொன்னம்பலம் குமாரசிங்கம்
818.யா/உ_/5812 திருமதி. நல்லம்மா முருகேசு
819.யா/உ_/5813 திருமதி. நாகம்மா தம்பிமுத்து
820.யா/உ_/5824 திருமதி. அன்னபாக்கியம் இராமலிங்கம்
821.யா/உ_/5827 திரு. முருகேசு நவரெத்தினம்
822.யா/உ_/5837 திரு. கணபதிப்பிள்ளை சண்முகம்
823.யா/உ_/5861 திரு. செல்லப்பா சுப்பையா
824.யா/உ_/5864 செல்வி. புனிதவதி கந்தையா
825.யா/உ_/5891 திருமதி. சிவமலர் துரைராசா
826.யா/உ_/5896 திரு. லோறன்ஸ் அரியநாயகம்
827.யா/உ_/5901 திரு. தம்பிஐயா சிவலிங்கம்
828.யா/உ_/5903 திரு. பொன்னையா தியாகராஜா
829.யா/உ_/5912 திருமதி. நாகம்மா நாகர்
830.யா/உ_/5920 திருமதி. செல்லம்மா தளையசிங்கம்
831.யா/உ_/5925 திருமதி. வடிவாம்பிகை சிவசுப்பிரமணியம்
832.யா/உ_/5927 திரு. சிற்றம்பலம் வேலுப்பிள்ளை
833.யா/உ_/5932 திரு. மயில்வாகனம் தருமலிங்கம்
834.யா/உ_/5936 திருமதி. மீனாட்சி பாலசுப்பிரமணியம்
835.யா/உ_/5972 திரு. சீனியப்பா இராஜரட்ணம்
836.யா/உ_/5975 திருமதி. திருவெங்கடவல்லி ஜெயசிங்கம்
837.யா/உ_/597 திரு. கந்தன் ஐயாக்குட்டி
838.யா/உ_/5983 திரு. மாதன் மாணிக்கம்
839.யா/உ_/6005 திரு. கந்தர் அரியதுரை
840.யா/உ_/6024 திருமதி. பிலுப்பாச்சி ஜேம்ஸ்
841.யா/உ_/6062 திருமதி. கனகம்மா துரைஐயா
842.யா/உ_/6107 திரு. நாகலிங்கம் யோகராசா
843.யா/உ_/6129 திரு. மார்க்கண்டு செல்வரத்தினம்
844..யா/உ_/6134 திருமதி. மஞ்சுளாதேவி சிவானந்தன்
845.யா/உ_/6167 திரு. வைத்திலிங்கம் இரத்தினம்
846.யா/உ_/6180 திரு. செல்லத்துரை வீரசிங்கம்
847.யா/உ_/6204 திரு. மாரிமுத்து செல்லப்பா
848.யா/உ_/6205 திரு. சுப்பிரமணியம் நடராசா
849.யா/உ_/6216 திருமதி. இரட்ணேஸ்வரி செல்லையா
850.யா/உ_/6219 திருமதி. சரஸ்வதி சுப்பையா
851.யா/உ_/6230 திருமதி. செல்லம்மா செல்லத்துரை
852.யா/உ_/6240 திருமதி. ஞானமலர் குணநாயகம்
853.யா/உ_/6274 திருமதி. பொன்னம்மா சதாசிவம்
854.யா/உ_/6296 திருமதி. நாகேஸ்வரி செல்லப்பா
855.யா/உ_/6304 திருமதி. அழகரத்தினம் தம்பிராசா
856.யா/உ_/6305 திரு. பொன்னையா இராசையா
.யா/உ_/6317 திருமதி. அன்னம்மா துரைச்சாமி
.யா/உ_/6329 திரு. கந்தர் சின்னத்தம்பி
.யா/உ_/6330 திருமதி. இராஜபூவதி சிவநம்பிகை
860.யா/உ_/6331 திருமதி. சிவக்கொழுந்து சத்தியநாதன்
861.யா/உ_/6335 திருமதி. ரத்தினம்மா வைரவநாதன்
862.யா/உ_/6342 திருமதி. சரஸ்வதி செல்லத்துரை
863.யா/உ_/6372 திருமதி. பொன்னம்மா செல்லத்துரை
864.யா/உ_/6379 திரு. ஜோசப் பரமானந்தம்
865.யா/உ_/6396 திரு. விசுவலிங்கம் இராசரத்தினம்
866.யா/உ_/6401 திரு. வைத்திலிங்கம் மார்க்கண்டு
867.யா/உ_/6411 திரு. அப்பையா இராசநாயகம்
868.யா/உ_/6418 திருமதி. பாக்கியம் நாகலிங்கம்
869.யா/உ_/6420 திருமதி. இராசம்மா கந்தையா
870.யா/உ_/6430 திருமதி. அனனம்மா செல்வரட்ணம்
871.யா/உ_/6443 திரு. வைரமுத்து சிவனடியார்
872.யா/உ_/6445 திரு. மரியான் பேதுரு யுவானி
873.யா/உ_/6447 திருமதி. சின்னாச்சி காத்தி
874.யா/உ_/6464 திருமதி. கனகம்மா பொன்னுத்துரை
875.யா/உ_/6480 திரு. அருளப்பு தேவசகாயம்
876.யா/உ_/6502 திரு. இராமு இராசமணி
877.யா/உ_/6503 திரு. சண்முகம் சின்னத்துரை
878.யா/உ_/6505 திருமதி. பூமணி வல்லிபுரம்
879.யா/உ_/6512 திருமதி. பூமணி மயில்வாகனம்
880.யா/உ_/6540 திருமதி. நல்லம்மா ஐயாத்துரை
881.யா/உ_/6552 திரு. மாரிமுத்து சத்தியநாதன்
882.யா/உ_/6583 திரு. கணபதிப்பிள்ளை மகாலிங்கம்
883.யா/உ_/6586 திரு. சிவகுரு பரமசிவம்
884.யா/உ_/6587 திரு. சுப்பையா செல்வரத்தினம்
885.யா/உ_/6599 திரு. பொன்னம்பலம் செல்லத்துரை
886.யா/உ_/6605 திரு. ஞானப்பிரகாசம் தேவசகாயம்
887.யா/உ_/6619 திருமதி. இரத்தினபூபதி சபாரத்தினம்
888.யா/உ_/6635 திரு. கோவிந்தசாமி கோணேஸ்வரன்
889.யா/உ_/6643 திரு. விஸ்வலிங்கம் பொன்னம்பலம்
890.யா/உ_/6650 திரு. நடேசு புலேந்திரராசா
891.யா/உ_/6653 திரு. சண்முகம் குணரத்தினம்
892.யா/உ_/6655 திரு. கபிரியேல் அருளானந்தம்
893.யா/உ_/6679 திருமதி. கனகம்மா செல்லையா
894.யா/உ_/6714 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
895.யா/உ_/6715 திரு. கதிர்காமர் செல்லையா
896.யா/உ_/6724 திருமதி. பிலோமினா பீற்றர்
897.யா/உ_/6743 திருமதி. சின்னம்மா அப்புத்துரை
898.யா/உ_/6747 திரு. முருகேசு இராசையா
899.யா/உ_/6772 திரு. செல்லப்பா பாலசுந்தரம்
900யா/உ_/6785 திரு. மாணிக்கம் செல்வரத்தினம்
901.யா/உ_/6805 திரு. மயில்வாகனம் கனகசுந்தரம்
902.யா/உ_/6822 திருமதி. இராசாத்தி நடராசா
903.யா/உ_/6847 திரு. நாகமணி கற்கண்டு
904.யா/உ_/6848 திருமதி. புஸ்பரத்தினம் வயித்திலிங்கம்
905.யா/உ_/6861 திரு. நாகலிங்கம் இளையதம்பி
906.யா/உ_/6866 திருமதி. பூமணி சோமசுந்தரம்
907.யா/உ_/6871 திருமதி. அன்னப்பிள்ளை வல்லிபுரம்
908.யா/உ_/6876 திரு. செல்லையா சீவரத்தினம்
909.யா/உ_/6889 திருமதி. தங்கரத்தினம் சபாரத்தினம்
910.யா/உ_/6891 திரு. கந்தையா திருச்சிற்றம்பலம்
911.யா/உ_/6900 திருமதி. பாக்கியரத்தினம் காசிநாதர்
912.யா/உ_/6915 திருமதி. மாணிக்கம் இராசம்மா
913.யா/உ_/6924 திருமதி. பாக்கியம் வைத்திலிங்கம்
914.யா/உ_/6932 திருமதி. இராசமணி சிவபாதசுந்தரம்
915.யா/உ_/6934 திருமதி. கனகம்மா நடராசா
916.யா/உ_/6942 திருமதி. பரஞ்சோதி வேலுப்பிள்ளை
917.யா/உ_/6946 திருமதி. நல்லம்மா தம்பிராசா
918.யா/உ_/6948 திருமதி. மனோன்மணி ஐயாத்துரை
919.யா/உ_/6953 திருமதி. செல்வரத்தினம் கந்தையா
920.யா/உ_/6971 திருமதி. இராசம்மா சண்முகலிங்கம்
921.யா/உ_/6988 திரு. முருகன் தம்பிஐயா
922.யா/உ_/6990 திரு. கதிரவேலு ஜோன்துரைராசா
923.யா/உ_/6994 திரு. இளையதம்பி பொன்னம்பலம்
924.யா/உ_/7013 திருமதி. திரவியம் பொன்னுத்துரை
925.யா/உ_/7024 திருமதி. நாகேஸ்வரி கணபதிப்பிள்ளை
926.யா/உ_/7047 திரு. வல்லிபுரம் செல்லத்துரை
927.யா/உ_/7073 திரு. தம்பிப்பிள்ளை கந்தையா
928.யா/உ_/7081 திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம்
929.யா/உ_/7090 திரு. வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளை
930.யா/உ_/7102 திரு. சுப்பையா சிங்கராசா
931.யா/உ_/7106 திருமதி. பரமேஸ்வரி முத்துக்குமாரசுவாமி
932.யா/உ_/7110 திருமதி. சொர்ணம்மா இரத்தினம்
933.யா/உ_/7121 திரு. செல்லையா சோமசுந்தரம்
934.யா/உ_/7129 திருமதி. இராசம்மா நன்னியர்
935.யா/உ_/7145 திருமதி. நாகரத்தினம் நவரத்தினம்
936.யா/உ_/7149 திருமதி. பொன்னம்மா இராசையா
937.யா/உ_/7153 திருமதி. அழகம்மா நடராசா
938.யா/உ_/7160 திரு. இராமநாதன் பாலகிருஸ்ணன்
939.யா/உ_/7188 திரு. கதிரன் கணபதிப்பிள்ளை
940.யா/உ_/7189 திருமதி. சிவகாமி வேலுப்பிள்ளை
941.யா/உ_/7203 திரு. ஐயாத்துரை இராசையா
942.யா/உ_/7209 திருமதி. அற்புதலட்சுமி கந்தசாமி
943.யா/உ_/7216 திருமதி. ராசேஸ்வரி அப்பாத்துரை
944.யா/உ_/7219 திரு. சபாரட்ணம் முருகேசபிள்ளை
945.யா/உ_/7241 திரு. கணபதி சின்னட்டி
946.யா/உ_/7255 திருமதி. இலட்சுமி துரையப்பா

## உடுவில் உதவி அரச அதிபர்பிரிவு

**உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் விபரம் வருமாறு:-**

1.யா/உ_/28 திரு. சின்னத்துரை நவரத்தினசிங்கம்
2.யா/உ_/411 திரு. பண்டாரி சந்திரபோஸ்
3.யா/உ_/425 திரு. சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்
4.யா/உ_/454 திரு. அப்புத்துரை யோகராஜா
5.யா/உ_/458 திரு. சீனி செல்லத்துரை
6.யா/உ_/573 திரு. கந்தையா சுப்பிரமணியம்
7.யா/உ_/1051 திருமதி. விஜயலக்சுமி கனகேஸ்வரன்
8.யா/உ_/1216 திரு. குலேந்திரசிங்கம் பரநிருபசிங்கம்
9.யா/உ_/1420 திருமதி. நாகேஸ்வரி இராசையா
10.யா/உ_/1435 திருமதி. புவனேஸ்வரி சீனிவாசகம்
11.யா/உ_/1616 திரு. அப்புத்துரை தம்பிராசா
12.யா/உ_/1619 திரு. கந்தையா பத்மநாதன்
13.யா/உ_/1646 திரு. சிவக்கொழுந்து சிவகுமாரன்
14.யா/உ_/1673 திருமதி. சத்தியபாமா செல்வராசா
15.யா/உ_/1764 திரு. சீனியன் இராசன்
16.யா/உ_/1895 திரு. கந்தையா மாசிலாமணி
17.யா/உ_/1917 திரு. கதிரவேலு நகுலேஸ்வரன்
18.யா/உ_/1958 திரு. செல்லத்துரை இராசநாயகம்
19.யா/உ_/2050 திரு. தர்மலிங்கம் தர்மராஜா
20.யா/உ_/2065 திரு. மு.சுப்பிரமணியம் வைடூரியம்
21.யா/உ_/2111 திரு. தம்பிமுத்து கணேசலிங்கம்
22.யா/உ_/2334 திரு. தில்லையம்பலம் தேவதாசன்
23.யா/உ_/2479 திரு. நாகலிங்கம் கிருஷ்ணலிங்கம்
24.யா/உ_/2604 திருமதி. ஜெயப்பிரதாதேவி ஜெயநாதன்
25.யா/உ_/2650 திருமதி. யோகேஸ்வரி மகாதேவன்
26.யா/உ_/2662 திருமதி. திருப்பதி அன்னலிங்கம்
27.யா/உ_/2663 திரு. பொன்னையா கனகநாயகம்
28.யா/உ_/2675 திருமதி. பரராசாசிங்கம் சறோஜினி
29.யா/உ_/2699 திரு. முருகேசு ஞானத்துரை
30.யா/உ_/2776 திருமதி. ஜெயலக்சுமி ஞானசேகரம்
31.யா/உ_/2781 திருமதி. சந்தானலட்சுமி துரைசிங்கம்
32.யா/உ_/2819 திரு. இரத்தினம் இந்திரதாஸ்
33.யா/உ_/2835 திரு. மார்க்கண்டு மகாதேவா
34.யா/உ_/2937 திரு. காசிலிங்கம் மனோநாயகம்
35.யா/உ_/3116 திரு: தம்பிஐயா தேவராஜா
36.யா/உ_/3173 திரு. சின்னட்டியார் கந்தையா
37.யா/உ_/3246 திரு. நாகலிங்கம் பாலசிங்கம்
38.யா/உ_/3257 திரு. மாதன் நடராசா
39.யா/உ_/3478 திருமதி. ஜெலிற்றா அரசகுமார்
40.யா/உ_/3593 திருமதி. சீனியம்மா துரைசிங்கம்
41.யா/உ_/3598 திரு. செல்லப்பா சதானந்தன்
42.யா/உ_/3639 திரு. செல்லத்துரை விநாயகமூர்த்தி
43.யா/உ_/ 3695 திருமதி. இராஜேஸ்வரி சண்முகலிங்கம்
44.யா/உ_/3965 திரு. கனகசபை தனபாலசிங்கம்
45.யா/உ_/3981 திருமதி. மனோகரிதேவி இராசதுரை
46.யா/உ_/4087 திரு. தருமலிங்கம் கதிர்காமநேசன்
47.யா/உ_/4098 திரு. கந்தையா தேவராஜா
48.யா/உ_/4109 திருமதி. சரஸ்வதி கந்தசாமி
49.யா/உ_/ 4488 திருமதி. சரஸ்வதி ஆனந்தசடாட்சரம்
50.யா/உ_/4855 திருமதி. மனோன்மணி மகாலிங்கம்
51.யா/உ_/4956 திரு. இளையதம்பி வயித்திலிங்கம்
52.யா/உ_/5009 திரு. நல்லையா ரகுநாதன்
53.யா/உ_/5205 செல்வி. வேலுப்பிள்ளை கமலாதேவி
54.யா/உ_/5319 திருமதி. சறோஜினிதேவி தணிகாசலம்
55.யா/உ_/5320 திரு. சுப்பிரமணியம் பாலகிருஸ்ணதாஸ்
56.யா/உ_/5488 திருமதி. பாலகௌரி சிவனேஸ்வரன்
57.யா/உ_/5541 திருமதி. நீற்ரா யோகராசா
58.யா/உ_/5544 திரு. பாலசிங்கம் சோதிநாதன்
59.யா/உ_/5598 திருமதி. இராசம்மா கந்தசாமி
60.யா/உ_/5626 திரு. வல்லிபுரம் கணேசலிங்கம்
61.யா/உ_/5803 திரு. அப்புக்குட்டி முருகேசு
62.யா/உ_/5875 திருமதி. பூமணி நாகமுத்து
63.யா/உ_/5944 திரு. செல்வராசா தில்லையம்பலம்
64.யா/உ_/5980 திரு. இராசசிங்கம் மயில்வாகனம்
65.யா/உ_/6109 திரு. தம்பிஐயா சிவகுமாரன்
66.யா/உ_/6190 திரு. தம்பிராசா முத்துலிங்கம்
67.யா/உ_/6192 திருமதி. கமலாதேவி சிவலிங்கம்
68.யா/உ_/6202 திரு. தம்பிரெத்தினம் சூறாஸ்செல்வராஜ்
69.யா/உ_/6261 திரு. சின்னவி செல்லத்துரை
70.யா/உ_/6495 திருமதி. தர்மராசா நாகபூசணி
71.யா/உ_/6567 திருமதி. மங்கயற்கரசி தில்லையம்பலம்
72.யா/உ_/6648 திருமதி. பத்மாவதி கௌரிபாலன்
73.யா/உ_/6756 திரு. சின்னத்தம்பி சிவனேஸ்வரன்
74.யா/உ_/6908 திரு. சங்கரன் பஞ்சலிங்கம்
75.யா/உ_/7226 செல்வி. மதிவதனி சின்னமணி
76.யா/உ_/7233 திரு. தேவசகாயம் சற்குணம்

## சாவககச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

**சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முப்பின் அடிப்படையில் தெரிவானோரின் விபரம் வருமாறு:-**

1.யா/சா/1 திரு. பெரியதம்பி இராசரத்தினம்
2.யா/சா/8 திரு. மதவீரசிங்கம் கதிரித்தம்பி
3.யா/சா/17 திருமதி. தங்கரத்தினம் சிவஞானம்
4.யா/சா/23 திரு. தம்பு தியாகராஜா.
5.யா/சா/29 திரு. பொன்னம்பலம் சுப்பையா
6.யா/சா/50 திரு. சின்னத்தம்பர் தில்லைநாதன்
7.யா/சா/62 திருமதி. மங்கையற்கரசி சிவபாதசுந்தரம்
8.யா/சா/67 திரு. பொன்னையா சிவகுரு
9.யா/சா/70 திரு. அச்சலிங்கம் கந்தையா
10.யா/சா/75 திரு. சின்னையா சின்னத்தம்பி
11.யா/சா/83 திரு. குமாரவேலு காசிப்பிள்ளை
12.யா/சா/96 திரு. நாகநாதர் நவரத்தினம்
13.யா/சா/101 திரு. சின்னப்பா மார்க்கண்டு
14.யா/சா/105 திரு. இளையப்பா காசிப்பிள்ளை
15.யா/சா/112 திரு. கணபதிப்பிள்ளை வீரசிங்கம்
16.யா/சா/119 திரு. கறுவல் நாகன்
17.யா/சா/141 திரு. சுப்பிரமணியம் சிவயோகநாதன்
18.யா/சா/177 திரு. கந்தையா நடராசா
19.யா/சா/195 திரு. முருகன் கனகையா
20.யா/சா/204 திரு. அப்புப்பிள்ளை சின்னையா
21.யா/சா/208 திருமதி. முத்தம்மா சின்னத்துரை
22.யா/சா/209 திரு. சுப்பர் மயில்வாகனம்
23.யா/சா/211 திருமதி. இலட்சுமி பரமு
24.யா/சா/213 திரு. கதிரவேலு நல்லையா
25.யா/சா/224 திரு. செல்லப்பா கார்த்திகேசர்
26.யா/சா/230 திரு. பசுபதி குழந்தைவேலு
27.யா/சா/247 திரு. கதிரவேலு கந்தையா
28.யா/சா/250 திரு. வல்லிபுரம் செல்லையா
29.யா/சா/252 திரு. வல்லிபுரம் செல்லையா
30.யா/சா/269 திரு. கதிரவேலு நல்லையா
31.யா/சா/273 திரு. சடையர் ஆறுமுகம்
32.யா/சா/275 திரு. சிதம்பரப்பிள்ளை சோமநாதர்
33.யா/சா/280 திருமதி. இலட்சுமிப்பிள்ளை வீரசிங்கம்
34.யா/சா/288 திரு. செல்லையா .சின்னத்துரை
35.யா/சா/305 திரு. செல்லையா சின்னத்துரை
36.யா/சா/312 திரு. சேதுகாவலர் சங்கரப்பிள்ளை
37.யா/சா/327 திரு. வேலாயுதர் கதிர்காமு
38.யா/சா/333 திரு. காசிப்பிள்ளை ஆறுமுகம்
39.யா/சா/340 திருமதி. தங்கம்மா சின்னத்தம்பி
40.யா/சா/359 திருமதி. சிவபாக்கியம் சோமசுந்தரம்
41.யா/சா/374 திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம்
42.யா/சா/380 திரு. பொன்னையா தன்மாவரதர்
43.யா/சா/406 திரு. சுப்பிரமணியம் கனகசபாபதி
44.யா/சா/407 திரு. சுப்பிரமணியம் கனகசபாபதி
45.யா/சா/416 திரு. சங்கிலியன் இராமு
46.யா/சா/425 திரு. சின்னப்பா செல்லத்துரை
47.யா/சா/428 திருமதி. சின்னன் ஏரம்பு
48.யா/சா/437 திருமதி. அன்னம்மா அம்பலவாணர்
49.யா/சா/441 திரு. நடராசா கந்தையா
50.யா/சா/458 திரு. கந்தர் சிவஞானம்
51.யா/சா/465 திரு. தம்பாபிள்ளை வன்னியசிங்கம்
52.யா/சா/466 திரு. கதிர்காமு வெற்றிவேலு
53.யா/சா/468 திரு. கந்தையா துரை
54.யா/சா/485 திருமதி. பரிமளம் கனகசபை
55.யா/சா/489 திரு. சுப்பையா கந்தசாமி
56.யா/சா/491 திரு. சின்னையா திசைவீரசிங்கம்
57.யா/சா/502 திரு. பகவான் நித்தியானந்தன்
58.யா/சா/505 திரு. வேதலிங்கம் தம்பித்துரை
59.யா/சா/507 திரு. மார்க்கண்டு சுப்பிரமணியம்
60.யா/சா/520 திருமதி. இராசமணி துரைசாமி
61.யா/சா/529 திரு. செல்லையா திருநாவுக்கரசு
62.யா/சா/541 திரு. ஐயாத்துரைஐயர் ஞானசர்மா
63.யா/சா/547 திருமதி. அபிராமி பாலசிங்கம்
64.யா/சா/559 திரு. கார்த்திகேசு கனகராசா
65.யா/சா/598 திருமதி. யோகாம்பிகை தவரத்தினம்
66.யா/சா/622 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
67.யா/சா/625 திரு: சபாபதிப்பிள்ளை கோபாலகிருஸ்ணன்
68.யா/சா/626 திரு. கார்த்திகேசு சதாசிவம்
69.யா/சா/627 திரு. கந்தையா கனகரத்தினம்
70.யா/சா/632 திரு. கந்தையா பொன்னையா
71.யா/சா/684 திருமதி. செல்லம்மா பொன்னன்
72.யா/சா/ 686 திருமதி. சரஸ்வதி சிவஞானசுந்தரம்
73.யா/சா/700 திருமதி. சின்னப்பிள்ளை சின்னத்தம்பி
74.யா/சா/701 திரு. சின்னத்துரை இரத்தினம்
75.யா/சா/702 திருமதி. சின்னப்பிள்ளை சின்னத்தம்பி
76.யா/சா/705 திரு. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை
77.யா/சா/ 755 திரு. வைரமுத்து பொன்னுத்துரை

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2005

78.யா/சா/756 திரு. வேலாயுதம்பிள்ளை திருநாவுக்கரசு
79.யா/சா/779 திருமதி. பொன்னி முருகன்
80.யா/சா/796 திரு. சாணையன் பொன்னையா
81.யா/சா/797 திரு. சாணையன் பொன்னையா
82.யா/சா/800 திரு. வயிரமுத்து பொன்னுத்துரை
83.யா/சா/805 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
84.யா/சா/819 திரு. சுப்பிரமணியக்குருக்கள் நடராசக்குருக்கள்
85.யா/சா/828 திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு
86.யா/சா/829 திரு. நல்லசேகரம்பிள்ளை பரமசாமி
87.யா/சா/833 திரு. தம்பையா இளையதம்பி
88.யா/சா/838 திருமதி. மகேஸ்வரி காசிநாதர்
89.யா/சா/839 திரு. முத்துக்குமாரு பொன்னுச்சாமி
90.யா/சா/845 திரு. தம்பிப்பிள்ளை இராமச்சந்திரன்
91.யா/சா/868 திரு. வல்லி கந்தன்
92.யா/சா/869 திருமதி. பாக்கியம் நவரத்தினம்
93.யா/சா/872 திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்
94.யா/சா/875 திருமதி. பரமேஸ்வரி விஸ்வநாதன்
95.யா/சா/910 திரு. சின்னத்தம்பி வைரவிப்பிள்ளை
96.யா/சா/911 திரு. வீரகத்தி முத்திலிங்கம்
97.யா/சா/918 செல்வி. திலகவதி தியாகராசா
98.யா/சா/920 திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்
99.யா/சா/933 திரு. கதிரர் கிருஷ்ணபிள்ளை
100.யா/சா/940 திரு. தம்பு நடராசா
101.யா/சா/941 திரு. கந்தன் சின்னத்தம்பி
102.யா/சா/947 திருமதி. தங்கரத்தினம் சபாரத்தினம்
103.யா/சா/952 திருமதி. இராசாம்பாள் பொன்னுச்சாமி
104.யா/சா/961 திரு. நல்லசேகரம்பிள்ளை நடராசா
105.யா/சா/962 திரு. மாணிக்கம் தம்பிமுத்து
106.யா/சா/977 திரு. கந்தன் முருகேசு
107.யா/சா/995 திரு. கதிரன் சோமு
108.யா/சா/1011 திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு
109.யா/சா/1017 திரு. ஆறுமுகம் நமசிவாயம்
110.யா/சா/1020 திரு. சரவணமுத்து தியாகராசா
111.யா/சா/1027 திரு. நிர்சிங்கர் ஆறுமுகம்
112.யா/சா/1030 திரு. சின்னவன் ஆறுமுகம்
113.யா/சா/1045 திரு. அருணாசலம் கந்தையா
114.யா/சா/1046 திரு. நாகமணி கனகரத்தினம்
115.யா/சா/1048 திரு. தில்லைநாதர் சுப்பிரமணியம்
116.யா/சா/1061 திருமதி. சாந்தம்மா சுப்பிரமணியம்
117.யா/சா/1066 திரு. சின்னப்பு குமாரசாமி
118.யா/சா/1087 திரு. அருணாசலம் குமாரவேலு
119.யா/சா/1092 திருமதி. அன்னம்மா விசுவலிங்கம்
120.யா/சா/1105 திரு. முருகுப்பிள்ளை தம்பையா
121.யா/சா/1106 திரு. தில்லையம்பலம் மகேசன்
122.யா/சா/1120 திரு. பேதுரு பிலிப்ஸ்
123.யா/சா/1122 திரு. சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்
124.யா/சா/1124 திரு. முருகேசு சண்முகம்
125.யா/சா/1136 திரு. கதிரேசு மாணிக்கம்
126.யா/சா/1147 திரு. பேதுறு எட்வேட்
127.யா/சா/1148 திரு. பேதுறு எட்வேட்
128.யா/சா/1149 திருமதி. சிவக்கொழுந்து சரவணமுத்து
129.யா/சா/1150 திரு. கதிரவேலு கந்தையா
130.யா/சா/1160 திரு. பொன்னையா ஜெயமோகன்
131.யா/சா/1166 திருமதி. பாக்கியம் வல்லிபுரம்
132.யா/சா/1172 திரு. சபாரத்தினம் கனகரத்தினம்
133.யா/சா/1186 திரு. தம்பிப்பிள்ளை அருணாசலம்
134.யா/சா/1190 திரு. அப்பாபிள்ளை நடராசா
135.யா/சா/1196 திரு. தம்பிப்பிள்ளை தியாகராசா
136.யா/சா/1199திரு. வேதவனம் கதிரேசு
137.யா/சா/1202 திரு. கதிரவேலு கந்தையா
138.யா/சா/1209 திரு. இராசக்கோன் குழந்தைவேலு
139.யா/சா/1218 திரு. கந்தையா துரைராசா
140.யா/சா/1226 திரு. பேதுறு பிலிப்ஸ்
141.யா/சா/1227 திரு. பேதுறு பிலிப்ஸ்
142.யா/சா/1237 திரு. கதிர்காமர் கந்தையா
143.யா/சா/1248 திரு. வேதவனம் தம்பு
144.யா/சா/1255 திருமதி. ஜெயலட்சுமி குழந்தைவேலு
145.யா/சா/1260 திரு. மயில்வாகனம் சிதம்பரநாதன்
146.யா/சா/1261 திரு. சுந்தரமூர்த்தி சிவானந்தன்
147.யா/சா/1264 திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை
148.யா/சா/1273 திரு. கந்ததாசகுருக்கள் சிவராசசர்மா
149.யா/சா/1274 திரு. கந்தையா பொன்னுத்துரை
150.யா/சா/1275 திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நாகராசா
151.யா/சா/1290 திரு. கந்தையா கணேசலிங்கம்
152.யா/சா/1303 திரு. வினாசித்தம்பி சுப்பிரமணியம்
153.யா/சா/1313 திருமதி. நாகம்மை தம்பிரத்தினம்
154.யா/சா/1338 திருமதி. விசாலாட்சி நடராசா
155.யா/சா/1351 திருமதி. செல்வி தம்பையா
156.யா/சா/1357 திருமதி. தங்கம்மா நாகராசா
157.யா/சா/1361 திரு. ஆறுமுகம் வல்லிபுரம்
158.யா/சா/1365 திரு. ஆறுமுகம் கார்த்திகேசு
159.யா/சா/1370 திரு. செல்லப்பா இராமலிங்கம்
160.யா/சா/1371 திருமதி. சிவக்கொழுந்து சிவப்பிரகாசம்
161.யா/சா/1391 திருமதி. அன்னபூரணம் சுப்பிரமணியம்
162.யா/சா/1395 திரு. சரவணை சின்னத்துரை
163.யா/சா/1397 திரு. ஆறுமுகம் நமசிவாயம்
164.யா/சா/1401 திரு. பரமு இராசரத்தினம்
165.யா/சா/1409 திருமதி. தையல்நாயகி மாணிக்கவாசகர்
166.யா/சா/1410 திருமதி. நாகம்மா கந்தையா
167.யா/சா/1427 திருமதி. செல்வரத்தினம் இராசஇரத்தினம்
168.யா/சா/1435 திரு. அருணாசலம் சின்னத்தம்பி பொன்னுச்சாமி
169.யா/சா/1439 திரு. கனகரத்தினம் இராசசிங்கம்
170.யா/சா/1462 திருமதி. யோகம்மா கார்த்திகேசு
171.யா/சா/1464 திரு. செல்லையா தம்பு
172.யா/சா/1477 திரு. இராமலிங்கம் தேவராசா
173.யா/சா/1479 திரு. சின்னத்தம்பி ஐயம்பிள்ளை
174.யா/சா/1480 திரு. செல்லையா குமாரசாமி
175.யா/சா/1486 திரு. அப்பாத்துரை தனபாலசிங்கம்
176.யா/சா/1494 திருமதி. அன்னமுத்து சின்னத்தம்பி
177.யா/சா/1495 திரு. கார்த்திகேசு பொன்னம்பலம்
178.யா/சா/1513 திரு. வினாசித்தம்பி செல்லையா
179.யா/சா/1517 திரு. காசித்தம்பி படைவீரசிங்கம்
180.யா/சா/1524 திரு. கதிராமு சின்னத்தம்பி
181.யா/சா/1531 திரு. கந்தையா குமாரசாமி
182.யா/சா/1534 திரு. வேலுப்பிள்ளை வாரித்தம்பி
183.யா/சா/1541 திரு. வல்லிபுரம் விக்கினேஸ்வரன்
184.யா/சா/1545 திரு. கந்தையா தங்கராசா
185.யா/சா/1560 திரு. சின்னப்பு இராசையா
186.யா/சா/1564 திரு. செல்லையா இளையதம்பி
187.யா/சா/1569 திரு. குமரையா படைவீரசிங்கம்
188.யா/சா/1575 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்
189.யா/சா/1578 திரு. காசிப்பிள்ளை யோகநாதன்
190.யா/சா/1589 திருமதி. புளோறா புஸ்பராணி சாமுவேல்
191.யா/சா/1603 திருமதி. நல்லம்மா தம்பிராசா
192.யா/சா/1608 திரு. செல்லையா மயில்வாகனம்
193.யா/சா/1624 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
194.யா/சா/1626 செல்வி. சத்தியதேவி பொன்னையா
195.யா/சா/1627 திரு. சின்னத்துரை தியாகராசா
196.யா/சா/1635 திருமதி. இரத்தினபூபதி நடராஜா
197.யா/சா/1640 திருமதி. சோதிமலர் நடேஸ்வரன்
198.யா/சா/1642 திருமதி. புவனேஸ்வரி இராமநாதன்
199.யா/சா/1643 திரு. மாணிக்கம் சந்திரன்
200.யா/சா/1645 திருமதி. மனோன்மணி முருகேசு
201.யா/சா/1653 திரு. செல்லையா நடராசா
202.யா/சா/1676 திருமதி. மகேஸ்வரி காசிநாதர்
203.யா/சா/1679 திரு. மாணிக்கம் சதாசிவம்
204.யா/சா/1681 திருமதி. கண்மணி கனகராசா
205.யா/சா/1683 திரு. கந்தையா விசுவலிங்கம்
206.யா/சா/1695 திரு. வேலுப்பிள்ளை தியாகராஜா
207.யா/சா/1699 திரு. சின்னத்தம்பி செல்லையா
208.யா/சா/1701 திரு. குலநாயகம் பசுபதிப்பிள்ளை
209.யா/சா/1702 திருமதி. செல்வமணி பேரம்பலம்
210.யா/சா/1712 திருமதி. நவமணி வல்லிபுரம்
211.யா/சா/1715 திரு. சரவணமுத்து பாலசிங்கம்
212.யா/சா/1717 திரு. செல்லமுத்து நமச்சிவாயம் குருசாமி
213.யா/சா/1723 திரு. சோமசுந்தரம் சண்முகராசா
214.யா/சா/1738 திருமதி. அன்னலட்சுமி எவேட்ஸ்
215.யா/சா/1739 திரு. வயிரமுத்து சரவணமுத்து
216.யா/சா/1742 திரு. செல்வரத்தினம் நீக்கிலாஸ் அரசரத்தினம்
217.யா/சா/1751 திரு. தம்பிப்பிள்ளை வேலாயுதம்
218.யா/சா/1759 திரு. கந்தையா சீவரத்தினம்
219.யா/சா/1774 திரு. சின்னத்துரை கனகசபை
220.யா/சா/1777 திரு. நல்லதம்பி தர்மராஜா
221.யா/சா/1781 திரு. இரத்தினவரதர் குலசிங்கம்
222.யா/சா/1782 திரு. செல்லத்துரை பாலசுப்பிரமணியம்
223.யா/சா/1785 திருமதி. நல்லம்மா மகாராசா
224.யா/சா/1788 திரு. சின்னப்பர் துரையப்பா
225.யா/சா/1793 திரு. வல்லிபுரம் இராசையா
226.யா/சா/1794 திரு. ஆறுமுகம் ஐயாத்துரை
227.யா/சா/1798 திரு. வல்லிபுரம் வேலாயுதபிள்ளை
228.யா/சா/1802 திரு. வல்லிபுரம் கயிலாயபிள்ளை
229.யா/சா/1804 திரு. முத்துக்குமாரு சபாரத்தினம்
230.யா/சா/1808 திருமதி. பாக்கியம் சண்முகம்
231.யா/சா/1814 திரு. கதிரவேலு குமாரசாமி
232.யா/சா/1816 திரு. வல்லிபுரம் தர்மலிங்கம்
233.யா/சா/1819 திருமதி. திலகவதி குமாரசாமி
234.யா/சா/1822 திரு. இராசையா மயிலுப்பிள்ளை
235.யா/சா/1825 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
236.யா/சா/1832 திருமதி. நல்லம்மா சுப்பையா
237.யா/சா/1836 திரு. சின்னத்தம்பி சதாசிவம்
238.யா/சா/1846 திருமதி. பத்மாவதி ஜெகநாதன்
239.யா/சா/1853 திரு. இராசேந்திரா சபாபதிப்பிள்ளை
240.யா/சா/1865 திரு. மயில்வாகனம் வேலாயுதம்
241.யா/சா/1869 திரு. செல்லப்பா குமாரசாமி
242.யா/சா/1871 திருமதி. பரமரத்தினம் மகாலிங்கம்
243.யா/சா/1876 திரு. செல்லப்பா குமாரசுவாமி
244.யா/சா/1888 திரு. தளையசிங்கம் நவரட்ணராஜா
245.யா/சா/1889 திருமதி. நாகேஸ்வரி நாகராசா
246.யா/சா/1890 திரு. கணபதிப்பிள்ளை பரமசாமி
247.யா/சா/1894 திரு. தளையசிங்கம் நவரட்ணராசா
248.யா/சா/1898 திருமதி. செண்பகவல்லி இராமச்சந்திர ஐயர்
249.யா/சா/1899 திருமதி. தங்கரட்ணம் மகாதேவன்
250.யா/சா/1901 திருமதி. மகேஸ்வரி கந்தையா
251.யா/சா/1931 திருமதி. கனகம்மா கணேசமூர்த்தி
252.யா/சா/1934 திரு. சின்னக்குட்டி கந்தையா
253.யா/சா/1972 திரு. தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்
254.யா/சா/1978 திரு. பரமு முருகேசு
255.யா/சா/1982 திரு. றெஜினோல்ட் துரைராஜ்ராஜ் அல்.பிரட் இராஜசிங்கம்ராஜ்
256.யா/சா/1991 திருமதி. சரஸ்வதி கணபதிப்பிள்ளை
257.யா/சா/1993 திரு. பரமு கைலாசபிள்ளை
258.யா/சா/2005 திருமதி. அமிர்தாம்பிகை சிதம்பரபிள்ளை
259.யா/சா/2013 திருமதி. நாகம்மா தில்லைநாதன்
260.யா/சா/2035 திரு. சின்னையா வடிவேலு
261.யா/சா/2055 தருமதி. ஆரோக்கியராணி செல்லக்கண்டு
262.யா/சா/2074 திரு. பொன்னம்பலம் நவரத்தினம்
263.யா/சா/2079 திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை
264.யா/சா/2081 திரு. நமசிவாயம் வேலுப்பிள்ளை
265.யா/சா/2096 திரு. இரங்கசாமி துரைசாமி
266.யா/சா/2101 திரு. சரவணமுத்து பூதத்தம்பி
267.யா/சா/2102 திரு. சுப்பையா தம்பாபிள்ளை
268.யா/சா/2108 திரு. சபாரெத்தினம் கதிரவேல்
269.யா/சா/2109 திரு. சண்முகம் ஜெகதீசன்
270.யா/சா/2110 திரு. அருணாசலம் பரமசாமி
271.யா/சா/2114 திரு. சரவணமுத்து தாமோதரம்
272.யா/சா/2121 திரு. முருகேசு சுப்பிரமணியம்
273.யா/சா/2123 திருமதி. பரமேஸ்வரி கணேசன்
274.யா/சா/2135 திரு. சின்னையா குமாரசாமி
275.யா/சா/2146 திரு. வல்லிபுரம் ஆறுமுகம்
276.யா/சா/2154 திருமதி. பொன்னம்மா சுப்பிரமணியம்
277.யா/சா/2178 திரு. சோமசுந்தரம் ஸ்ரீதரன்
278.யா/சா/2181 திரு. சட்டநாதர் கந்தசாமி
279.யா/சா/2183 திரு. செல்லையா தம்பிராசா
280.யா/சா/2185 திரு. அருளானந்தன் நீலகண்டன்
281.யா/சா/2187 திரு. கந்தையா விநாயகமூர்த்தி
282.யா/சா/2189 திரு. செல்லர் பரராசசிங்கம்
283.யா/சா/ 2192 திரு. சின்னத்தம்பி ரவீந்திரன்
284.யா/சா/2195 திருமதி. கமலாஜெனி தாமோதரம்பிள்ளை
285.யா/சா/2229 திரு. நமசிவாயம் மகாதேவன்
286.யா/சா/2238 திரு. டானியல் வேதநாயகம்
287.யா/சா/2240 திருமதி. சின்னம்மா கந்தையா
288.யா/சா/2248 திருமதி. புனிதவதி இராமலிங்கம்
289.யா/சா/2252 திரு. கந்தையா இராசரட்ணம்
290.யா/சா/2253 திருமதி. பறுபதம் கந்தையா
291.யா/சா/2257 திருமதி. இராசலட்சுமி செல்லத்துரை
292.யா/சா/2264 திரு. சின்னத்தம்பி வீரகத்தி
293.யா/சா/2266 திரு. நாகமுத்து தங்கவடிவேல்
294.யா/சா/2267 திரு. நாகமுத்து தங்கவடிவேல்
295.யா/சா/2275 திருமதி. மகேஸ்வரி நடராசா
296.யா/சா/2277 திரு. பொன்னம்பலம் சிவபாதசுந்தரம்
297.யா/சா/ 2281 திருமதி. அமராவதி கனகசுந்தரம்
298.யா/சா/2299 திரு. ஐயாத்துரை சிற்றம்பலம்
299.யா/சா/2305 திரு. சரவணமுத்து வெற்றிவேற்பிள்ளை
300.யா/சா/2308 திரு. அருளம்பலம் நவரத்தினம்
301.யா/சா/2312 திரு. நமசிவாயம் ஞானசுந்தரம்
302.யா/சா/2332 திரு. வினாயகமூர்த்தி சபாநாயகம்
303.யா/சா/2341 திரு. சின்னத்துரை கணபதிப்பிள்ளை
304.யா/சா/2349 திரு. மயில்வாகனம் சுவாமிநாதன்
305.யா/சா/2377 திருமதி. தங்கமணி கனகரட்ணம்
306.யா/சா/2414 திரு. முத்து மாணிக்கம்
307.யா/சா/2418 திருமதி. பொன்னம்மா சிவசம்பு
308.யா/சா/2424 திருமதி. ஆச்சிப்பிள்ளை கந்தையா
309.யா/சா/2427 திருமதி. சவரினா பாக்கியம் ஏபிரகாம்
310.யா/சா/2429 திரு. துரைராசா ஜெகதீஸ்வரன்
311.யா/சா/2433 திரு. தீயோகு சின்னப்பு
312.யா/சா/ 2438 திரு. முருகேசு குமாரசாமி
313.யா/சா/2481 திரு. சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்
314.யா/சா/2482 திரு. சின்னத்தம்பி பேரம்பலம்
315.யா/சா/2495 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
316.யா/சா/2501 திருமதி. செல்லம்மா செல்லையா
317.யா/சா/2504 திரு. சின்னையா கருணைலிங்கம்
318.யா/சா/2509 திரு. கந்தர் நடராசா
319.ய.ா/சா/2510 திரு. கந்தர் நடராசா
320.யா/சா/2513 திரு. கந்தையா அம்பலவாணர்
321.யா/சா/2515 தி ரு. கந்தையா அம்பலவாணர்
322.யா/சா/2520 திரு. குமாரசாமி தில்லைநாதன்
323.யா/சா/2535 திரு. தம்பிமுத்து வினாசித்தம்பி
324.யா/சா/2536 திரு. வைத்திலிங்கம் கோவிந்தசாமி
325.யா/சா/2546 திரு. தில்லையம்பலம் வன்னியசிங்கம்
326.யா/சா/2571 திரு. சபாபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
327.யா/சா/2574 திருமதி. பரமேஸ்வரி கைலாசபிள்ளை
328.யா/சா/2579 திரு. பொன்னையா நடராசா
329.யா/சா/2580 திரு. முருகேசு தாமோதரம்பிள்ளை
330.யா/சா/2586 திரு. தம்பு சிதம்பரப்பிள்ளை
331.யா/சா/2590 திருமதி. மீனாட்சிப்பிள்ளை திருஞானசம்பந்தர்
332.யா/சா/2597 திரு. சின்னையா சிவராமலிங்கம்
333.யா/சா/2605 திரு. சுவீணி ஞானராஜ்தேவா
334.யா/சா/2609 திரு. முருகப்பா பஞ்சாமி
335.யா/சா/2611 திரு. செல்லையா சின்னையா
336.யா/சா/2617 திரு. கந்தையா சரவணமுத்து
337.யா/சா/2623 திரு. முருகப்பா நடராசசுந்தரம்
338.யா/சா/2627 திரு. சரவணை நாகமணி
339.யா/சா/2644 திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை
340.யா/சா/2646 திருமதி. கமலம் முத்தையா
341.யா/சா/2647 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
342.யா/சா/2648 திரு. கந்தையா வேலாயுதம்
343.யா/சா/2655 திருமதி. தெய்வானைப்பிள்ளை செல்லையா
344.யா/சா/2677 திருமதி. நாகம்மா சிவகுரு
345.யா/சா/2682 திருமதி. தங்கமுத்து சின்னத்துரை
346.யா/சா/2706 திரு. மயில்வாகனம் சிற்றம்பலம்
347.யா/சா/2707 திரு. வாரித்தம்பி கதிரேசபிள்ளை
348.யா/சா/2726 திருமதி. பூரணம் செல்லத்துரை
349.யா/சா/2727 திருமதி. புவிநாயகம் சின்னக்குட்டி
350.யா/சா/2730 திரு. வேலாயுதர் செல்லையா
351.யா/சா/2737 திருமதி. செல்லாச்சி கதிரன்
352.யா/சா/2738 திருமதி. அன்னபூரணம் செல்வதிசைநாயகம்
353.யா/சா/2741 திரு. சின்னத்தம்பி நாகலிங்கம்
354.யா/சா/2759 திரு. விசுவலிங்கம் இராசநாயகம்பிள்ளை
355.யா/சா/276 திரு. ஆறுமுகம் சிவபாதசுந்தரம்
356.யா/சா/2784 திரு. வயிரவன் தம்பையா
357.யா/சா/2785 திருமதி. சிவநாயகம் சின்னத்துரை
358.யா/சா/2791 திருமதி. புவிநாயகம் சின்னக்குட்டி
359.யா/சா/2797 திரு. கதிரன் கதிரேசு
360.யா/சா/2804 திரு. சின்னத்தம்பி கந்தையா
361.யா/சா/2819 திரு. வயிரவன் தாமோதரி
362.யா/சா/2828 திரு. கதிர்காமு மயில்வாகனம்
363.யா/சா/2839 திருமதி. தவமணி தங்கராசா
364.யா/சா/2844 திரு. கதிர்காமு சின்னன்
365.யா/சா/2850 திருமதி. வள்ளிப்பிள்ளை சின்னப்பொடியன்
366.யா/சா/2870 திருமதி. பவாணி காசிப்பிள்ளை
367.யா/சா/2886 திரு. கதிர்காமர் இராசையர்
368.யா/சா/2888 திரு. வேலன் கந்தையா
369.யா/சா/2915 திருமதி. அன்னப்பிள்ளை சுப்பையா
370.யா/சா/2921 திரு. செல்லையா இராசரத்தினம்
371.யா/சா/2922 திரு. பெரியதம்பி மார்க்கண்டு
372.யா/சா/2936 திரு. இராமு சின்னத்தம்பி
373.யா/சா/2951 திரு. மயில்வாகனம் வைத்திலிங்கம்
374.யா/சா/2956 திரு. முதலித்தம்பி செல்லத்துரை
375.யா/சா/2970 திரு. சின்னையா சங்கரப்பிள்ளை வைரமுத்து
376.யா/சா/2974 திரு. வினாசித்தம்பி தம்பிப்பிள்ளை
377.யா/சா/2978 திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை
378.யா/சா/2987 திரு. செல்லப்பா கந்தசாமி
379.யா/சா/2995 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
380.யா/சா/3006 திரு. கார்த்திகேசு கோவிந்தப்பிள்ளை
381.யா/சா/3020 திரு. பொன்னர் நாகலிங்கம்
382.யா/சா/3029 திரு. கார்த்திகேசு நடராசலிங்கம்
383.யா/சா/3053 திரு. சின்னத்தம்பி கனகரத்தினம்
384.யா/சா/3063 திரு. வேலுப்பிள்ளை நாகராசா
385.யா/சா/3071 திரு. குஞ்சர் விநாசித்தம்பி மகாலிங்கம்

(தொடரும்)

# பண்டாரநாயக்க VS ராஜபக்ஷ

பண்டாரநாயக்க வம்சத்திடம் வழி. வழி வந்த அதிகாரபீடத்தை. அத்தனை இலகுவாக தாரை வார்த்துக் கொடுத்துவிட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒன்றும் வாத்து முட்டாளல்ல. தொடர்ந்தும் ஸ்ரீலங்கா என்ற சிங்கள பௌதத தீவகத்தின் தலைமையை. எது விதத்திலும் தங்கள் வம்சத்தில் வைத்திருப்பதே அவரின் இரகசிய நோக்கமாக இருக்கிறது. இருந்தா லும். அதற்கான சில கரடு முரடான பாதைகளைக் கடக்கும் நிலையை ஜனாதிபதி சந்திரிகா அடைந்திருக்கிறாள்என்பது மட்டுமே உண்மை.

உண்மையில் சிங்கள பரம்பரை வம்சங்களில். பண்டாரநாயக்க போன்ற ஒரு அரசியல் வரலாறு கொண்ட வம்சமாக ராஜபக்ஷ வம்சமும் இருந்து வருகிறது. இத்தகைய அரசியல் வரலாறு இறுக்கமாகப் பின்னிப்பிணைந்த ஒரு வம்சத்திடம். தலைமைப் பதவியைத் தாரை வார்த்துக் கொடுப்பது. பண்டாரநாயக்க வம்சத்திற்கு ஒரு நிரந்தர முழுக்குப் போடும் செயல் மட்டுமல்ல. அந்த வம்சத்திற்குச் செய்யும் ஒரு துரோகமுமாக முடிந்துவிடும் என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெரிந்த விடயம்.


### ஜனாதிபதிக்குள்ள பொறுப்பு

பண்டாரநாயக்க வம்சத்தை மீண்டும் நிமிர்த்தி பெயர் பெற வைக்கும். அதீத அரசியல் சாணக்கியம் உள்ள ஒருவராக. தம்பி அனுரா பண்டாரநாயக்க இல்லை என்பதும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வெட்டவெளிச்சமாகத் தெரிந்த ஒரு இரகசியம் தான்.

ஆக. எப்படிக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும். பண்டாரநாயக்க வம்சத்திடமிருந்து கைநழுவிப் போகத் துடிக்கும் ஸ்ரீலங்கா அதிகார பீடத்தை. இழுத்து நிறுத்தி. அந்தப் பரம்பரையிலேயே அந் நாட்டின அதிகாரம் தொடர்வதற்கான வாய்ப்பொன்றை உருவாக்குவது இப்போது சந்திரிகாவுக்கு முன் எழுந்துள்ள ஒரு இமாலயப் பொறுப்பு.

இப் பொறுப்பை அவர் அவ்வளவு எளிதாக தட்டிக்கழித்துவிடப் போவதில்லை. 2006ஆம் ஆண்டு இறுதி வரை தனது ஜனாதிபதி ஆட்சிக் காலத்தை இழுத்துச்சென்று. அதற்குள் ஜனாதிபதி ஆட்சியமைப்பை நாடாளுமன்ற ஆட்சியதிகாரமாக மாற்றியமைத்து. சர்வ அதிகாரங்களும் கொண்ட ஒரு பிரதமராக தானே மீண்டும் உருவாகலாம்என்ற ஆசை முன்னர் அம்மையாரிடம் இருந்தது என்னமோ உண்மைதான். அதற்காக. அந்த ஆசை நிராசையாகும் பட்சத்தில். இரண்டாம் நிலை மாற்றுத் திட்டம் வகுக்காது இருந்திருக்க. சந்திரிக்காவா கொக்கா என்ன?!

கடந்த காலத்தை கீறிக்கிளறிப் பார்த்தால். சந்திரிகா ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரண்டாம் நிலை



மாற்றுத் திட்டம் வைத்திருந்தது பட்டென்று வெளிச்சத்திற்கு வரும். முதன்முதல் பதவியேற்றபோது. "யுத்தமா? ஐயையோ.. பொண்ணாயப் பிறந்த மென்மையானவள் எனக்கு. யுத்தமென்றாலே நடுக்கம் வரும். நான் புலிகளின் தலைவரோடு நேரடியாகப் பேசி. நிரந்தர சமாதானம் செய்வதற்காக மட்டுமே. ஜனாதிபதி பதவியை எடுக்க ஆசைப்படுகிறேன்" என்றார். பெரும்பான்மை இனம் மட்டுமல்ல. பாவம் நமது தமிழினமும் அம்மாவை நம்பி. சந்திரிகா காப்பும் சந்திரிகா சேலையும் வாங்கிப் பாவித்தது உண்மைதான். ஏன். சந்திரிகா தொதலும். சந்திரிகா வடையும். சந்திரிகா ஊத்தப்பமும் கூட ஈழத்தில் 'ஓஹோ' என்று விற்பனையானது என்றால். அம்மாவின் சாதுரியத்தை யோசித்துப்பாருங்கள்.

அத்தனை அதிகாரங்களும் கொண்ட அந்தக் குதிரையில் ஏறிய பின்னர். கடந்த 11 வருடங்களாக ஒரு நேர்மையான சமாதான முயற்சியில் இன்று வரை இவர் இறங்கியதாக வரலாறு இல்லை. விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு இவர் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

யுத்தத்திற்கான வியுகங்கள். யுத்த ஒப்பந்தங்கள். யுத்த நிலையில் படைகள். யுத்தத்திற்கான நிதித் திட்டமிடல்கள். யுத்த உணர்வைத் தூண்டும் இனவாதப் பேச்சுக்கள். யுத்த உணர்வுகொண்ட தளபதிகள். அதிகாரிகள். அமைச்சர்கள் என்று இன்னோரன்ன எல்லாவற்றையுமே. யுத்தத்திற்கான ஆயத்த நிலையிலேயே வைத்துக்கொண்டு. பேச்சுத்தடை. எழுத்துத்தடை. பிரயாணத்தடை. போக்குவரத்துத்தடை. உணவுத்தடை. கல்வித்தடை. மருந்துத்தடை என்று யுத்த மேகத்திற்கு உந்துசக்தி கொடுத்தும் விற்றமின்களையும் ஏவிவிட்டபடி. 11 வருடங்களையும் இருமுகம் கொண்ட இரும்பு மனிதராகச் செலவழித்த பெருமைக்குரியவர் அம்மையார்.

### கடந்தகாலம்

மூன்று வருடங் கள் பின்னோக்கிச் சென்று. கண்ணை மூடிக் கொண்டு ஸ்ரீலங்கா தீவகத்தை நினைவில் கொண்டு வந்தால். பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். கொழும்பு நகர்ப்பகுதிகளிலும். புறநகர்ப்பகுதிகளிலும். நாட்டின் ஏனைய அனைத்து முக்கிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள். இராணுவ அரண்கள். பாதுகாப்பு வேலிகள். கெடுபிடிகள. கைதுகள். இவை தவிர. தினம்தினம் வந்திறங்கிய இராணுவ உடல்கள். அழுகுரல்கள். வேதனைகள். கொலைகள். தற்பழிப்புக்கள். ஊழல்கள் என்று நாடே குட்டிச்சுவராகி. மீளாக் கடனில் மூழ்கியிருந் தது. அப்போதுதான் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று ஆட்சியமைத்தார். வேகவேகமாக அனைத்துக் கெடுபிடிகளும்ஒரு சில வாரங்களிலேயே முற்றாக நீங்கியது. மிக அதிக மான வேகத்தில் நாட்டின் அமைதியை உருவாக்கிக் காட்டியதாலோ என்னவோ. அதன் சுவையை பெரும்பான்மையினம் படிப்படியாக உணர்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

முதல் தடவை ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒருவருடம் முன்னதாக. தனது மக்கள் செல்வாக்கு ஓரளவு உயர்ந்திருந்த போது. சாதுரியமாக புதிய தேர்தலொன்றை நடாத்தி. மீண்டும் தனது கதிரையை உறுதி செய்து கொண்டார். இதுகூட அவரது மாற்றுத் திட்டம் தான். உண்மையில் தனது பதவிக்காலத்தை முழுமையாக இறுதிவரை இழுத்துச் செல்ல பல யுக்திகளையும் அப்போது பரீட்சித்துப் பார்த்தார். யுத்த நிறுத்தம். பேச்சுவார்த்தை. என்பவற்றோடு தான் ஒரு சமாதான தேவதை போன்றும் காட்ட முயன்றார். ஆனால அவை பிசுபிசுத்துப் போனதும். அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை தொடங்குமுன்னர். தனது கதிரையின் பலத்தை உறுதிசெய்து கொள்வதற்காக. ஜனாதிபதி தேர்தலை முன்னோக்கி நகர்த்தினார் அவர்.

1994 இல் பதவியேற்ற ஜனாதிபதி. 2000ஆம் ஆண்டு வரை பதவியிலிருக்க வாய்ப்பிருந்தும். 'ஜெயசுக்குறு' போரில். முழுமையான ஊடகத் தடையை விதித்து. விடுதலைப் புலிகளை அரச படைகள் வேகமாக வெற்றி கண்டு வருவதாக அரச ஊடகங்களுடாக பரப்புரை செய்த சந்திரிகா. அந்தப் புகழ்மங்குவதற்கு முன் னதாக. ஒரு வருடம் ஜனாதிபதித் தேர்தலை முன்னோக்கி நகர்த்தி. 1999 டிசம்பரில் தேர்தலை நடாத்தினார். வடக்கிலும் கிழக்கிலும் கடும் யுத்த சூழல் இருந்ததால். இதை சாதகமாகப் பயன்படுத்தி. தெற்கில் திட்டமிட்டு வெற்றி பெற்றார் சந்திரிகா. திட்டமிட்டு வெற்றிபெற்றார் என்று சொலவதற்கும் ஒரு காரணம் உண்டு. தேர்தல் பிரசாரத்தில். சந்திரிகா எதிர்பார்த்த மக்கள் செல்வாக்கு அவருக்குக் கிடைக்கவில்லை. யுத்தத்தை முற் றாக நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவருவதாக வாக்களித்த ரணிலின் செல்வாக்கும் சரிக்குச்சரி போட்டி போடடது. ஜே.வி.பி. கட்சியும். தனது சார்பில் நந்தன குணதிலக்கவை தனி ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியிருந்தது. இந்நிலையில் அவசர மாற்றுத் திட்டம்தீட்டினார் சந்திரிகா. உடனே வெடித்தது குண்டு.

அவரது இறுதிப் பிரசாரக் கூட்டத்தின் முடிவில் வெடித்த குண்டு. அவரது இடது கண்ணைத் தாக்கியதாகக்கூறி. அதைப் பு,தாகாரப்படுத்தி. கண்ணை முற்றாக மூடி பெரிய அளவில் மருந்து கட்டி. வெள்ளைத் துணியால் மூடிக்கொண்டு. நாட்டு மக்களிட்ம் வாக்கு வரம் கேட்டு மன்றாடினார் சந்திரிகா. 'எனது உயிரையும் துச்சமென மதித்து நாட்டைப் பாதுகாக்கப் போராடுவேன' என்று சபதமிடடார். 'வெற்றி நிச்சயம்' என்ற இராணுவ நகர்வில் வெற்றி கிடைக்காவிட்டாலும். அரசியல் நகர்வில் வெற்றி பெற்றார் சந்திரிகா.

டிசம்பர் 22ஆம் திகதி. அப்போது தற்காலிக தேர் தல் ஆணையாளராக இருந்த திசநாயக்க. ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் வெற்றிபெற்றதாக அறிவித்தார். அறிவித்த அன்று மாலையே நாட்டின் தலைமை நீதிபதியான சரத் என்.சில்வா முன்னிலையில் பகிரங்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் சந்திரிகா.

### மாற்றுத்திட்டம்

இருப்பினும். இந்த வெற்றியால் இறுமாப்படைந்து ஏமாந்து போகாது. மாற்றுத திட்ட மொன்றையும் அப்போதே உருவாக்கினார் சந்திரிகா. அது தான் இரகசிய பதவிப் பிரமாணம். யாருமற்ற ஒரு அறையிலே. அதே பிரதம நீதியரசரின் முன்பாக. ஆறு வருடங்கள் தாமதமாக வரப்போகும் ஒரு சிக்கலுக்கு. மாற்றுத் தீர்வொன்றைத் தேட முற்பட்டவர் இவர்.

2001 டிசம்பரில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில். ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று ஆடசியமைக்கும் போதே தனக்கென இரகசிய மாற் றுத் திட்டம் தீட்டிக்கொண்டவர் சந்திரிகா. பதவியேற்று ஒரு வருடத்திற்கு ஆட்சிக் கலைப்பு இல்லை என்பதால். அந்த ஒரு வருடமளவும் ரணில் விக்கிரமசிங்க எடுத்த சமாதான முயற்சிகளையெல்லாம் ஒரு பக்கம் ஏற்றுக்கொள்பவர் போன்று காட்டிக்கொண்டு. மறு பக்கம் ஜே.வி.பி. போன்ற ஐ.தே.க. எதிரணிக் கட்சிகளைக் கூட்டுச் சேர்ப்பதில் இரகசிய முயற்சிகளை மேற்கொண்டார்.

ரணிலைச் சந்தித்த போதெல்லாம். நாடாளு மன்றத்தைக் கலைக்கும் எண்ணம் தனக்கில்லை என்று அடித்துச் சொல்லி. அவர் புதிய மாற்றுத் திட்ட மெதுவும் தட்டாதிருக்க ஆவன செய்தார். ஒரு வருடம் முடியும்வரை. ரணில் எடுத்த அத்தனை முயற்சிக்கும் முட்டுககட்டை போடாத சந்திரிகா. திடீரென அமைச்சுப் பறிபபை மேற்கொண்டார்.

அம்மாவின் குணத்தை அறிந்து வைத்திருந்த ரணில். ஒரு தற்பாதுகாப்புக்காக. ஜப்பானிலிருந்து விசேடமாக யசூசி அகாசியை கொழும்புக்கு அழைத்து. நாடாளுமன்றக் கலைப்பு நடக்காது என்ற அம்மாவின் சத்தியத்திற்கு சாட்சியாக வைத்தார். அகாசியை. ஜனாதிபதி மாளிகையில் வைத்து சந்தித்த சந்திரிகா. ரணில் அமெரிக்கா சென்று திரும்பும்வரை. நாடாளுமன்றக் கலைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று உறுதி கூறினார். அகாசியும் அதை நம்பி. ரணிலைப் பயணம் அனுப்பிவிட்டு. ஜப்பான் திரும்பினார். இருந்தும் என்ன பயன்? அமெரிக்காவில் முக்கிய சந்திப்பில் இருந்த ரணிலின் காதில். ஜீ.எல்.பீரிஸ் பிரித் ஓதினார். ரணில் ஆடிப் போனார். பாவம். அப் படியிருக்காதே;அகாசி சாட்சி நின்றாரே; சர்வதேச சாட்சியாயிற்றே; என்றெல்லாம் தற்காலிகமாக தனக்குத்தானே ஆறுதல்சொன்னர் தனது ஆருயிர நண்பர் மொரகொடவுக்கு டயல் பண்ணினார். ஆம். செய்தி உண்மைதான். பிரதம மந்திரியாக அமெரிக்கா பறந்த ரணில். வெறும் கட்சித் தலைவராக நாடு திரும்பினார். சந்திரிகா தனது மாற்றுத் திட்டத்தை. எந்தக் காரணத்திற்காகவும் யாருக்காகவும் விட்டுக்கொடுக்கவில்லை. நாடாளுமன்றத்தை முடக்கினார். அடுத்து நாடாளுமன்றத்தையே கலைத்தார். ஒரு வருடமாக அவர் அமைத்து வைத்திருந்த மாற்றுத் தட்டம் அரங்கேறியது. ஜப்பானிலிருந்து அகாசி ஓடோடி வந்து. அம்மையே இது என்ன லீலை என்று கேட்டார். 'ஐயா. நீர் நமது அரசை. புலிகளோடு சமரசம் செய்வதற்கு ஒழுங்கு செய்கின்ற அலுவலை மட் டும் பாரும். மீதியை நான் பார்க்கிறேன்' என்று வெடடொன்று துண்டு இரண்டாகச் சொன்னார் திருமதி.குமாரதுங்க!

### கூட்டணி அமைப்பு

இவவளவும் ஏன்?! கொள்கைகள் ஒத்துப் போகாததால். இணைவதற்கு வாய்ப்பில்லை என்று கருதப்பட்ட ஜே.வி.பி.யுடன். அங்கும் இங்கும் வெட்டித் திருத்திய நொண்டி ஒப்பந்தமொன்றை செய்து கொண்டு. கூட்டணி அமைத்து. தேர்தலிலும் தன் கட்சியையே வெற்றி பெற வைத்தார். இவ்வாறு மாற்று யுக்தியொன்றை எப்போதும் தனது ஆடுகளத்தில் பயன்படுத்திக்கொண்டே வந்திருப்பவர் சந்திரிகா.

ஒரு சந்தர்ப்பத்தில். சுதந்திரக்கட்சிக்கு கூடுதல் அழுத்தங்களை ஜே.வி.பி. பிரயோகிப்பதை அவதானித்த அவர். திடீரென அந்தக் கட்சியின் தலைமையையே மாற்றியமைத்து. சுதந்திரக் கட்சியின் தலைவராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நியமித்து. தனது ஜனாதிபதி கதிரையைத் தக்க வைத்துக் கொண்டவர் சந்திரிகா.

இப்போது மீண்டும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு க.பொ.த. (உ/த) சோதனைக் காலம். பல்கலைக்கழக அனுமதிக்காக. குதிரை ஓடியே ஆக வேண்டும். மாற்று வழிகளெல்லாம் சுருங்கிங்கொண்டே வருகின்றன. இருந்தாலும். நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஏதாவது ஒருவகையில் ஆட்சிப் பொறுப்பைத் தக்க வைத்திருக்கும் பண்டாரநாயக்க வம்சத்திடமிருந்து. மாற்றான் பரம்பரைக்கு ஆட்சிப்பொறுப்பை தாரை வார்த்துக் கொடுக்க. அம்மையார் அத்தனை இலகுவாக வழியேற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை.இறுதிவரை இதைத் தவிர்க்க தனது போராட்ட யுகதிகளை முன்னெடுத்தே தீருவார். குறிப்பாக. தனது இறுதி ஆயுதமாக. மாற்று யுக்தியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கவே செய்வார்.

ஆக. வரவிருக்கும் மூன்று மாதங்களும். கொழும்பு அரசியலில் கூழும் சாம்பாரும் தான். அழகிய தேன்கூட்டை கரடி சொறிந்த கதைதான். அனைத்துப் பகுதியும் கொட்டப்படவே போகின்றன. வேதனைகள் அனைவரையும் ஆட்கொள்ளவே போகின்றன. சுவையான தேன் எப்படியும் நிலத்தில் சிந்தி விரயமாகத்தான் போகின்றது.மண்டும் அரசியல் காய்நகர்த்தல்கள் பலவற்றை. இன்னும் ஓரிரு வாரங்களில் நாமெல்லாம் பார்க்கத்தான போகிறோம்.

### அடுத்த கட்டம்

நாடாளுமன்றத்தைக் கலைத்து. ஜனாதிபதி ஆட்சியைத் தன் கையில் தற்காலிகமாக எடுத்துக்கொள்வதே ஜனாதிபதி சந்திரிகா வைத்திருக்கும் முதலும் முக்கியமானதுமான திட்டமாக இருக்கும். முப்படைத் தளபதிகளை உஷார் நிலைக்குக் கொண்டு வந்தமை. காரணமின்றி அவசரகாலச் சட்டத்தை அறிவித்தமை. கடற்படைத் தளபதியாக தன் சொல் கேட்பவரை நியமித்துள்ளமை. சீனாவினதும் பாகிஸ்தானினதும் உதவியையும் கேட்டு வைக்குழ் முயற்சிகள். கொழும்பில் தேடுதல் என்ற போர்வையில் முககிய அரச நிலைகளை தன் நேரடிப் பாதுகாப்புக்குள் கொண்டுவந்துள்ளமை என்று பலவற்றை நோக்கலாம்.

ஜனாதிபதி ஆட்சியைத் தக்க வைத்துக கொண்டு. ரெபரண்டம் (விருப்பு வாக்கெடுப்பு முறை) மூலமாக ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முற்றுப் புள்ளி வைத்து



நாடாளுமன்ற ஆட்சியமைப்பை உள்வாங்குவதற்கு மக்கள் ஆணையைப் பெறுவது இன்னுமொரு யுக்தியாக அமையலாம். அப்படி விருப்பு வாக்கெடுப்பு முறை மூலமாக மக்கள் ஆணை பெறப்பட்டால். தனது பதவியை. பிரதம நீதியரசர் முன்பாக. அனுரா போன்ற ஒருவரிடம் தற்காலிகமாகக கையளித்து. சுதந்திரக் கட்சியின் தலைமை வேட்பாளராக நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிகா கலந்து கொள்ளலாம். அதிலே வெற்றிபெற்று புதிய பிரதமராக உருவாவதற்கும் வாய்ப்பிருக்கிறது. தோற்றால் கூட. எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்ந்து. பண்டாரநாயக்க பரம்பரை ஆட்சியைத் தக்க வைக்க வாய்ப்பிருக்கிறது.

இந்த முயற்சிகள் கைகூடத் தவறும் பட்சத்தில். போரை வலிந்து ஆரம்பித்து. போரையே காரணம் காட்டி. ஜனாதிபதித் தேர்தலையும். ஏனைய அரசியல்

### இணையப் பார்வை

மாற்றங்களையும். தனது சர்வ வல்லமை கொண்ட அதிகாரங்களைப் பாவித்து பின்போடலாம். நாட்டில போர்ச்சூழல் காணப்படுவதால் தேர்தல் வைப்பதற்கு வாய்ப்பில்லை என்று இலகுவான ஒரு காரணத்தைக காட்டலாம்.இந்த இடைக்கால தாமதங்களைப் பயன்படுத்தி. புதிதாக அரசியல் களத்தில் குதித்துள்ள சந்திரிகாவின் மைந்தனை ஒரு பலமான பொறுப்பில் இருத்தி. மக்கள் செல்வாக்கைப் பெறுவதற்கு வழிசெய்ய லாம்.

எதை எப்படிப் பார்த்தாலும். தென்னிலங்கை அரசியலில் சுமுக நிலையல்ல. சூன்ய நிலையே காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. மேகம் கறுக்குது. மழை வரப் பார்க்குது. வீசி அடிக்குது காற்று. அரசியல் காற்று என்ற நிலைதான்.


தற்போதைய தென்னிலங்கை அரசியல் மாற்றங்களைப் பார்த்து. புதிய மாற்றங்கள் விரைவில் வருவதாக இறுமாப்படைந்திருப்போரெல்லாம். கடந்த 11 வருடகால வரலாற்றை சரியாக ஆய்ந்தறியத் தவறியவர்கள் மட்டுமே. உண்மையில். பண்டாரநாயக்க பரம்பரையின் ஆட்சிக்காலம் இன்னும் முடிவடையவிலலை. ராஜபக்ஷ பரம்பரைக்கு ஆட்சியில் இப்போது விடிவில்லை. இதுதான் மறைந்துகிடக்கும் நிஜம்.

*'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொத்த சீர்த்த இடத்து'* - திருவள்ளுவர்.

காலம கைகூடும் வரையில். கொக்குபோல் பொறுமையாகக் காத்திருப்பர். காலம் வாய்ப்பாகக் கிடைத்ததும. அது குறி தவறாமல் குத்துவது போல் செய்து முடிப்பர். □









# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை ⑧

என். சொக்கன்


அதற்குமுன், யார் இந்த ஸ்ரீநிவாஸ்? அவருக்கும் வீரப்பனுக்கும் என்ன தொடர்பு? அவரை ஏன் வீரப்பன் கொல்ல வேண்டும்?

1986ஆம் ஆண்டு, கர்நாடக போலீஸாரால் வீரப்பன் கைது செய்யப்பட்டு, சாம்ராஜ் நகர்ப் பகுதிக்கு மாற்றப்பட்டபோது, வீரப்பனின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றிருந்தவர் தான் வனத் துறை அதிகாரியான ஸ்ரீநிவாஸ்.

ஆனால், வீரப்பன் அங்கிருந்து உடனே தப்பி ஓடி விட்டதால், ஸ்ரீநிவாஸுக்கும் வீரப்பனுக்கும் உடனடி நட்போ, பகையோ உண்டாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. ஆனால் ஏனோ, ஸ்ரீநிவாஸ தன்னைச் சுட்டுக்கொல்லப் பார்க்கிறார் என்று வீரப்பன் உறுதியாக நம்பினான்.

ஆனால், உண்மையில் வீரப்பனைத் திருத்தி, எல்லோரையும் போன்ற சகஜமான வாழ்க்கைக்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் ஸ்ரீநிவாஸ் முயன்று கொண்டிருந்தார். இதற்காக, தனது மேலதிகாரிகளிடம் பேசி, பல ஏற்பாடுகளைச் செய்திருந்தார் அவர்.

ஸ்ரீநிவாஸ் அனுப்பிய தூதுவர்கள், வீரப்பனையும் அவனுடைய கூட்டத்தினரையும் அடிக்கடி



சந்தித்தார்கள். வரப்பன் தனது எல்லாவிதமான சட்ட விரோத நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்திவிட வேண்டும். பினனர், அரசாங்கத்திடம் சரணடைந்து, புதிய வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என்று விரும்பினார் ஸ்ரீநிவாஸ்.

ஆனால், அவருடைய பேச்சில் வீரப்பனுக்கு நம்பிக்கை இலலையோ அல்லது விருப்பமில்லையோ தெரியவில்லை. பேச்சுவார்த்தைகள் எல்லாம் ஒரு முடிவுக்கு வராமல் இழுத்தடித்தன. ஸ்ரீநிவாஸும், சளைக்காமல் முயன்று கொண்டிருந்தார்.

இநத சந்தர்ப்பத்தில் தான், ஸ்ரீநிவாஸுக்கும் வீரப்பனின தஙகை மாரியம்மாவுக்கும் பழக்கம் ஏற்பட்டது. சில மாதங்களுக்குப் பின், மாரி கர்ப்பிணியாக இருப்பது தெரிய வந்தது.

இதைக் கேள்விப்பட்டதும், வீரப்பனுக்கு ஆத்திரம் பொங்கியது. மாரியின் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தகப்பன், ஸ்ரீநிவாஸ் தான் என்று உறுதியாக நம்பிய அவன, உடனடியாக மாரியை மணந்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீநவாஸுக்கு மிரட்டல் அனுப்பினான்.

ஆனால் ஸ்ரீநிவாஸ் இதை ஏற்கவில்லை. 'எனக்கும் அவளுக்கும் அப்படி எந்தத் தொடர்பும் இல்லை' என்று சொன்ன அவர், மாரியை மணந்து கொள்ள மறுத்துவிட்டார். வீரப்பனின் கோபம் எல்லை மீறியது.

அப்போது, பிரச்சினையை இன்னும் சிக்கலாக்குவது போல், வீரப்பனின் தங்கை மாரி, விஷம் குடித்து இறந்துவிட்டார். தன்னுடைய தங்கையின் மரணத்துக்குக் காரணம் ஸ்ரீநிவாஸ்தான் என்று முடிவுகட்டிய வீரப்பன், அதற்குப் பழிவாங்கவேண்டும் என்று முடிவெடுத்தான்.

(சுனாத் ரகுராம் தன் புத்தகத்தில் வேறொரு மாதிரி இந்தச் சம்பவத்தை விளக்குகிறார். வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி காட்டுக்குத் தப்பியோட உதவி செய்ததாகவும், வீரப்பன் கூட்டத்துக்கு அரிசி, பருப்பு வாங்கிக் கொடுத்ததாகவும் மாரியின் மீது போலீஸார் குற்றம் சாட்டினர். ஒரு வாரத்துக்குள் வீரப்பன் எங்கிருக்கிறான் என்று சொல்லாவிட்டால் மாரியைக் கற்பழித்து விடுவதாக மிரட்டினர். இதனால் பயந்து போன மாரி, ஸ்ரீநிவாஸிடம் வந்து முறையிட, மாரிக்கு உதவ ஸ்ரீநிவாஸ் மறுத்துவிட்டார். மாரி பயந்து போய், பூச்சி மருந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டுவிட்டார். வீரப்பன், தன் தங்கையின் மரணத்துக்கு ஸ்ரீநிவாஸ்தான் காரணம் என்று அவரைக் கொன்று பழிவாங்க முடிவு செய்தான்).

ஆகவே, 'நான் சரணடையத் தயாராக இருக்கிறேன்' என்று ஸ்ரீநிவாஸுக்குத் தகவல் அனுப்பினான் வீரப்பன். அதுபற்றி மேலும் பேசுவதற்காக, அவரை நேரில் சந்தித்துப் பேச விரும்புவதாகவும் சொன்னான் வீரப்பன்.

இதை முழுவதுமாக நம்பிய ஸ்ரீநிவாஸ், வீரப்பனின் தம்பி அர்ஜுனனுடன், அவனைச் சந்திக்கக் கிளம்பினார்.

ஸ்ரீநிவாஸ் தன்னுடைய கோட்டைக்குள் நுழையும்வரை காத்திருந்த வீரப்பன், உடனடியாக அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான். பிறகு, அதிலும் திருப்தியடையமாமல், ஸ்ரீநிவாஸின் தலையை அறுத்து எடுத்துக்கொண்டு, வெறும் முண்டத்தை மட்டும் விட்டுச்சென்றான்.

இந்தத் தகவல் வெளியானபோது, வீரப்பனின் கொடூரமான மூகம் எல்லோருக்கும் தெளிவாகத தெரிந்தது. பத்திரிகைகள் அவனைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, முக்கியத்துவம் தந்து பிரசுரித்தன.

இப்படி ஒரு கொடூரமான கொலைகாரனைப் பற்றிக் கட்டுரை எழுதும்போது, அவனுடைய புகைப்படத்தைப் பிரசுரிக்க வேண்டாமா? ஆகவே, 'வீரப்பனின் புகைப்படம் வேண்டும்' என்று காவல்துறையைப் பத்திரிகைகள் அணுகின.

காவல்துறையிடம், வீரப்பனின் ஒரே ஒரு புகைப்படம்தான் இருந்தது. 1986ஆம் ஆண்டு, வீரப்பன் அபூர்வமாகக் கைதான போது எடுத்த அந்தக் கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தையே, எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுத்தார்கள்.

அன்றிலிருந்து, எந்த மொழிப் பத்திரிகையானாலும், வீரப்பனைப் பற்றிய எந்தக் கட்டுரையானாலும், இந்தப் புகைப்படத்தைத் தான் பிரசுரிக்க வேண்டிய நிலைமை. அதுவும் அஞ்சு வருடப் பழசு!

இதல் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அந்த அப்பாவிப் புகைப்படத்தைப் பார்த்தால், வீரப்பனை ஒரு கொலையாளி என்றே சொல்லத் தோன்றாது. அப்படியொரு பவ்யத்துடன், பணிவாகக் கைகளைக் கட்டியவாறு அரசாங்க கேமராவுக்கு போஸ் கொடுத்திருந்தான் வீரப்பன். மிக ஒல்லியான தேகம், கண்களில் நேர்ப் பார்வை -இதையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் போது, 'இவனா இப்டியொரு கொடூரமான கொலை செய்தான்? சும்மா விளையாடாதீங்கப்பா' என்று தான் சொல்லத் தோன்றும்.

ஆனால், பத்திரிகைகளுக்கு வேறுவழியில்லை. அந்த ஒரே புகைப்படத்தை, வண்ணம் மாற்றி, வேறுவிதமாக வெளியிட்டு சமாளிக்கலாமே ஒழிய, புதிய புகைப்படங்களுக்கு வாய்ப்பே இல்லை.


மற்ற பத்திரிகைகள் இதை எப்படிப் பார்த்ததோ தெரியவில்லை. ஆனால், தமிழ்ப் புலனாய்வுப் பத்திரிகையான 'நக்கீரன்' இதழின் ஆசிரியர் கோபால், இந்த ஃபோட்டோ விஷயத்தில் மிகவும் அதிருப்தி அடைந்தார். ஒரே ஃபோட்டோவைத் திரும்பத் திரும்ப வெளியிட்டுக் கொண்டிருப்பதால், வீரப்பன் தொடர்பான செய்திகள், கட்டுரைகள் ஒரே மாதிரியான (சலிப்பான) தோற்றம் கொண்டிருந்தன. இதை அவர் விரும்பவில்லை.

இதற்கு முக்கியமான காரணம், 'நக்கீரன்' கோபால் அடிப்படையில் ஒரு வடிவமைப்புக் (லே-அவுட்) கலைஞர். இப்போதும், அவருடைய பத்திரிகைக்கு, முடிந்தவரை அவரேதான் வடிவமைப்பு செய்கிறார். வீரப்பன் விஷயம் சூடு பிடித்த அந்தக் காலகட்டத்தில், நக்கீரன் இதழின் அட்டைகளையும் அவரே வடிவமைத்துக் கொண்டிருந்தார். அப்போதுதான், வீரப்பனின் 'ஒரே ஃபோட்டோ' விஷயம் அவருக்குப் பெரிய சவாலாக அமைந்தது.

(தொடரும்)

# நல்லூரரான் திருவடிக்கு

## இன்று சப்பறத் திருவிழா



### நல்லூரரான் வருகின்றான்

சப்பறதமேறி நல்லூரரான் வருகிறான்
சங்கிலியன் ஆண்ட மண்ணில் வருகிறான்
எப்போதும் எமைக்காக்கும் நல்லூரரான் வருகிறான்
எழில்மயிலில் பறந்தோடி வருகின்றான்
தப்பேதும் புரிந்தாலும் தயைகாட்ட வருகிறான்
தமிழர்களின் தலைவன் வருகிறான்
இப்போது எமக்கேற்ற தீர்வுகொண்டு வருகிறான்
ஈழநல்லூர் வாழுகின்ற வடிவேலன் வருகின்றான்

*மதுரகவி*

### அல்லல் போக்கும் அற்புத வேலன்

ஆறுமுகனைத் தொழுபவர்க்கு அல்லல் ஏதெடி-எங்கள்
ஆறுமுக வேலவனின் அழகு ஏதெடி

ஆறுமுகம் பன்னிருகரத்தில் ஆற்றல் உள்ளதடி-எங்கள்
ஆறுதலுக்கு அவன்வதனம் பதில்சொல்லுமடி

நல்லைக்கந்தன் புகழ் எவ்வளவு பெரிதாகுமடி-எங்கள்
கல்லைக்குடைந்தும் கடல்கடந்தும் தூரம்போகுமடி

எல்லோரும் போற்றும் கந்தனருள் பெரிதாகுமடி-எங்கள்
அல்லல்களைவான் ஆறுதல்தருவான் அற்புதவேலனடி

பர்ரெல்லாம் போற்றும் பக்தர்களை கணக்கிடலாமோடி-எங்கள்
நேரமதைக் கணித்துக்கொண்டால் விளங்கிக்கொள்ளலாமடி

வள்ளி தெய்வ யானிக் கோலம் அழகாகுமடி-எங்கள்
வள்ளலாரின் இச்சாகிரியா ஞானசக்தி தத்துவமாகுமடி

*சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன*

### நல்லோரை வல்லவர்கள் ஆக்கிடுவாய்!

நல்லூரிற் கந்தா நாளும் உனை வேண்டுகின்றோம்
நற்றமிழ்ப் பண்பாடு கலை கலாசாரம் நிலைத்து
நம் தமிழ் மக்கள் நலம்வாழ உனதருளால்
நல்லோரை நாட்டில் வல்லவர்களாக்கிடுக!

நாளும் இந்நாட்டில் நடாத்திடும் அராஜகம்
நல்லூர் வேலவனே நசுக்கி அழித்திடுவாய்
பொல்லாதார் செய்யும் பொல்லாப்பு யாவையும்
நில்லாதொழிந் திடவேயுன் நெற்றிக்கண் திறந்திடுக

கலியுகத்திற் கந்தா நின் கருணை இன்றேல்
கிலிகொண்ட மாந்தர்வலிவிழந்திடுவாரன்றோ
அபயந்தந்து உன்னைநம்பி இருப்பவர்களை
ஆதரித்தருள்புரிவாய் அற்புத நல்வேலவனே

*நீர்வைமணி*

### கந்தனே போற்றி!

நல்லையின் கந்தா போற்றி
நடராஜன் மைந்தா போற்றி
வல்லசூரனை வதைத்தாய் போற்றி
வள்ளி தெய்வானை போற்றி
அல்லல்கள் ஒழிப்பாய் போற்றி
அமரரைக் காத்தாய் போற்றி
நல்லதே அளிப்பாய் போற்றி
நாரணன் மருகா போற்றி

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

### சிரிப்பில் அருள் காணலாம்

மூகத்தில் முகம் காணலாம்
ஆறு முகத்தில் முருகனின் முகம் காணலாம்
ரதத்தில் நிறம் காணலாம்
சப்பறத்தில் நிறம் காணலாம்
குன்று எடுத்தோன் குணம் காணலாம்
குணத்தில் மணம் காணலாம்
அமைதி பெருகிட சமாதானம் நிலைத்திட
முகத்தில் முகம் காணலாம்
புன்னகை மன்னனின் சிரிப்பில் அருள்காணலாம்

*க.மகேந்திரன்,நல்லூர்*

### மயில்வாகனா சரணம்

கந்தனே கடம்பனே கார்த்திகேயனே நல்லையின் வாசனே
எந்தையே ஏரகத்துறைபவனே எம்துயர் தீர்த்தருள் புரிபவனே
பந்தபாசத் தீவினையகற்றி பக்தர்க் கருளும் பராபரனேசிவ
மைந்தனே வள்ளிக்கணவனே மயில்வாகனனே சரணம்
சரணமையா

*சைவப்புலவர் க.மல்லிகாதேவி*

அரம் போலும் கூர்மைய ரேனும்
மரம்போல்வர் மக்கட் பண்பிலாதவர - குறள்

வலம்புரி

## ஜே.வி.பியை அடக்கும் பொறுப்பு சிங்கள மக்களுடையதே!

ஜே.வி.பியின் அட்டகாசம் கடந்த சில வாரங்களாக தென்பகுதியில் வேகம் கொண்டுள்ளது.

தென்பகுதியில் தமிழ்-சிங்கள மக்களிடையே இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அங்குள்ள தமிழ் மக்களை வெளியேற்றுவதே ஜே.வி.பியின் இலக்காக உள்ளது.

இதற்கு வாய்ப்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் துணைபோகின்றார் போல்தெரிகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெறவேண்டுமெனில் அதற்கு ஜே.வி.பியின் ஆதரவு தேவை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நினைத்துக் கொள்கிறார்.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் தம்மை எதிர்த்தாலும், பிரதமர் ஒருபோதும் தம்மை எதிர்க்க மாட்டார் என்பது ஜே.வி.பிக்கு நன்கு தெரியும்.

இதனால் தாம் செய்யக்கூடிய அட்டகாசங்களை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக செய்து விடவேண்டுமென அவர்கள் திட்டம் போட்டுள்ளனர்.

தென்பகுதியில் வாழும் தமிழ்மக்களை வடக்கு கிழக்கிற்கு அனுப்பிவிட்டு, தென்பகுதியை தனிச் சிங்கள பிராந்தியமாக்குவது-அங்குள்ள தமிழர்களின் உடைமைகளை சூறையாடுவதுபோன்று திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஜே.வி.பியினர் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

தமது இலக்கை அடைவதற்கான ஒரு வழியாகவே தமிழ் ஊடக்ங்கள் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். தமிழ் ஊடகங்களை தாக்குவது, ஊடகவியலாளர்களைத் தாக்குவது என்ற படிநிலைகள் மூலம் தென்பகுதி வாழ் தமிழ் மக்களிடையே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்துவது ஜே.வி.பியின் முதல் பணியாக உள்ளது.

இவ்விதம் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்திவிட்டு ஆங்காங்கே கலவரங்களைத் தூண்டுவதன் மூலமாக 1983 களில் நடந்தது போன்ற இனக்கலவரத்தை ஏற்டுத்தி விடலாம் என ஜே.வி.பியினர் நம்புகின்றனர்.

20 வருட கால இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணவேண்டுமென்ற கருத்தை ஜே.வி.பியினர் ஒரு போதும் கூறியது கிடையாது. மாறாக விசமத்தனமான பிரசாரங்களை தென் பகுதி மக்களிடையே பரப்பி தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வை அந்த மக்களிடையே ஏற்படுத்துவதிலேயே ஜே.வி.பி முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

ஜே.வி.பியின் கபடத்தனத்தை புரிந்து கொள்ள முடியாத அப்பாவி சிங்கள மக்கள் அவர்களின் பிரசாரத்தை அப்படியே நம்பி விடுகின்றனர்.

இதன் காரணமாகவே அடியோடு வெட்டி அழிக்கப்படவேண்டிய நச்சு களை நாட்டின் மூன்றாவது அரசியல் சக்தியாக வளர்ச்சி கண்டுள்ளது.

பொதுமக்கள் விழிப்பாக இருக்கின்ற போது எவராலும் எதுவும் செய்து விடமுடியாது, மாறாக யார் எதைக்கூறினாலும் அதனை அப்படியே நம்பிவிடும் பழக்கம் மக்களிடம் இருக்குமாயின் ஜே.வி.பி போன்ற நாசகார சக்திகளின் அழிவுப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவே செய்யும்.

எனவே சிங்கள மக்கள் முதலில் சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் சமாதானத்திற்கு எதிராக இருக்க கூடிய ஜே.வி.பி போன்றவர்களை அடக் குவதற்கான வழிகளை செயற்படுத்த வேண்டும் அப்போது தான் இந்தநாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும். அதுவரை சமாதானம் என்பது... ???

# இன்றைய தமிழ்த்தேசிய மாநாட்டில் அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி பிரகடன நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்களால் வலியுறுத்தப்பட்ட கருத்துக்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இன்று கிளிநொச்சியில் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், அன்றாட பிரச்சினைகள் தொடர்பாகவும் சிங்கள தேசத்தின் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாதம் தாமாக தமிழர்மீது இரக்கம் கொண்டு அரசியல் உரிமைகள் எதனையும் தரப்போவதில்லை என்பதையும் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குள்நின்று கொண்டு தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு மட்டுமல்ல அன்றாட பிரச்சினைக்கு கூட தீர்வுகாணமுடியாது என்பதும் நிருபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகமும் சிங்கள பேரினவாதத்தின் முகங்களை ஓரளவு புரிந்துகொண்டுள்ள நிலையில், தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு ஓரணியாக நின்று சர்வதேச சமூகத்திற்கு எமது கோரிக்கைகளை வலியுறுத்துவோம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

தமிழ் மக்களாகிய நாம் எமது சுயநிர்ணய உரிமையோடு எமது மரபு வழித்தாயகத்தில் தனித்தேசிய இனமாக வாழவிரும்புகின்றோம். எமது இந்த நிலைப்பாட்டினையும் எமது விடுதலைப்போராட்டத்தினையும் சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும்.

அதன் மூலம் நிரந்தர அமைதித்தீர்வு ஏற்பட சர்வதேச சமூகம் ஒத்துழைக்கவேண்டுமென வலியுறுத்துவதற்காக,

அனைத்து மக்களையும் இந்நிகழ்வில் அணியணியாகத்திரண்டு வருமாறு அன்புடன் வேண்டுகிறேன் எனவும் அவர், இது விடயம் தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற)

# இலங்கையில் தினமும் 3500 பேர் சட்டவிரோத கருக்கலைப்பு

(கொழும்பு)

இலங்கையில் தினமும் 3500 இற்கும் மேற்பட்டோர் சட்டவிரோத கருச்சிதைவுகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

சுகாதார பராமரிப்பு, போசாக்குத்துறை அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சின் கல்விப் பணியகப் பிரிவுப்பணிப்பாளர் டாக்டர் காந்தி ஆரியரட்ண தலைமையில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் இலங்கையில் திருமணமானவர்களே அதிகளவில் கருச்சிதைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடப்பேராசிரியர் லலனி பீரிஸ் குறிப்பிட்டார்.

கருச்சிதைவு நடவடிக்கையை ஒரு குடும்பத்திட்டமிடலாக கருதும் நிலைமை தோன்றியுள்ளது. இது மிகவும் பிழையான அணுகுமுறையாகும்.

கருச்சிதைவு என்பது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதொரு நடவடிக்கையாகும் உலகில் வருடத்திற்கு 19 மில்லியன் கருச்சிதைவுகள் பாதுகாப்பற்ற முறையில் நடைபெறுகின்றன.

இதனால் சுமார் 60ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றனர். ஏனையவர்கள் பக்கவிளைவுகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இலங்கையில் நாளொன்றுக்கு 3500 மேற்பட்ட கருச்சிதைவுகள் இடம்பெறுகின்றன.

இந்நாட்டில் கருச்சிதைவு செய்வோரின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்து வருகிறது. இது கவலைதரக் கூடிய நிலைமையாகும்.

கருச்சிதைவு நடவடிக்கையில் திருமணமாகாதவர்களே அதிகளவில் இந்நாட்டில் ஈடுபடுகின்றார்கள் என்றதொரு அபிப்பிராயம் வளர்ந்திருக்கிறது. ஆனால் இதில் உண்மையில்லை அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின்படி திருமணமான பெண்கள் 56.9சதவீதமானோர் இச்செயலில் ஈடுபட்டுவருவதாக தெரியவந்துள்ளது.

சட்டவிரோதமான கருச்சிதைவு நடவடிக்கையை மேற்கொள்பவர்கள் பாதுகாப்பற்ற முறையிலேயே இதனைச் செய்கின்றனர். (ற-9)

# ௯ போராளிகள் வீரச்சாவு

(கிளிநொச்சி)

பல்வேறு காலகட்டப் பகுதிகளில் வீரச்சாவடைந்த 9போராளிகளின் விபரங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளனர்.

அவை வருமாறு,

வீரவேங்கை கேசப்பிரியன்-(தர்மபாலன் அருமத்துரை, அம்பிலாந்துறை குருக்கள் மடம் களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு, சம்பவம்:01.08.1997 அன்று வன்னி மாவட்ட ஓமந்தைப் பகுதியில் முன்னேறி நிலைகொண்ட ஜயசிக்குறு இராணுவத்தினரின் முகாம் தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை நிதிகரன்-(பாளகப்போடி தங்கத்துரை, அம்பிலாந்துறை மட்டக்களப்பு, தற்காலிக முகவரி கந்சேனை அம்பிலாந்துறை மட்டக்களப்பு, சம்பவம்: யாழ். மாவட்ட அரியாலைப் பகுதியில் சூரியக்கதிர் நடவடிக்கைக்கு எதிரான தாக்குதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றபோது 17.10.1997 அன்று வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை குமரன்-(பொன்னையா குமார், ஆற்றங்கரை வீதி கின்னையடி வாழைச்சேனை மட்டக்களப்பு, சம்பவம்: வாழைச்சேனை காயிதாளை என்னும் இடத்தில் நடவடிக்கைக்காக சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவடைந்தார்.)

2ஆம் லெப்டினன்-(புகாரி என்ற சண்டிலியன்- நாகராசா விஜயகுமார், மெயின் வீதி கொம்மாந்துறை செங்கலடி மட்டக்களப்பு, சம்பவம்: 18.09.1992 அன்று மட்டு. அம்பாறை மாவட்ட அகத்தியர்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை காளிதாஸ் (சின்னப்போடி யோகநாதன்- மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பு, சம்பவம்: 05.06.1991 அன்று மட்டு. அம்பாறை மாவட்டம் அகத்தியர் குளம் என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை: கப்டன் நிலாந்தன்-(கந்தையா மகேஸ்வரன்,சொறிவில் மன்னம்பிட்டி பொலநறுவை, சம்பவம்: 06.02.1992 அன்று மட்டு அம்பாறை மாவட்ட கல்லிச்சை வடமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை வித்தியானந்தன்-(காளிப்போடி வித்தியானந்தன், எருவில் களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு, சம்பவம்: 12.05.1992அன்று நவுண்டியன்மடு என்னும் இடத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.)

வீரவேங்கை அந்தோனி என்ற ஜெயகரன்-(சின்னத்தம்பி குணராசா), சொறிவில் மன்னம்பிட்டி மட்டக்களப்பு, சம்பவம்: 12.06.1990 அன்று மட்டு. அம்பாறை மாவட்ட குடும்புறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தின் முகாம் தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.)

வீரவேங்கை ராஜா-(ஜெகானந்தகணேஸ் சந்திரகுமார், விஸ்ணு ஆலய வீதி கிரான் மட்டக்களப்பு, சம்பவம்: 16.08.1990 அன்று மட்டு அம்பாறை மாவட்ட நகர்ப்பகுதியில் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்கா இராணுவம் கைது செய்து தாக்கியதில் வீரச்சாவடைந்தார்)இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளன. (ற)

# வருடஇறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளின் 2004.2005 வருட இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் இம் மாதம் நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வருட இறுதிப்பரீட்சை -செப்.22-செப்.23 வரையும், இரண்டாம் வருட இறுதிப் பரீட்சை செப். 26 - செப் 30 வரையும் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (ற)



## சாயி அருளமுதம்

ஒருகார், வங்கியில் இடப்பட்டுள்ள பணம் நகரத்தின் ஆடம்பரமான பகுதியில் ஒரு பங்களா ஆகியவற்றினால் என்ன பயன்? இவையாவும் இருந்த போதிலும் இதயத்தில் அன்பு இல்லாவிடின் உங்கள் இதயம் நிரந்தர இரவாகி ஆசை, கோபம் என்னும் வௌவால்கள் வதியும் இருண்ட பாழடைந்த கோவிலாக மாறிவிடும். இத்தகைய இதயங்கள் அச்சத்தாலும் குற்றத்தாலும் நோயுற்று தீயவையாக இருக்கும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# வலப்பக்கம் வாகனம் செலுத்தினால் கடுமையான சட்ட நடவடிக்கை

### தமிழீழ காவல்துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

வலது பக்கத்தில் வாகனம் செலுத்துவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு காவல்துறையின் போக்குவரத்து பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ காவல்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகன ஓட்டுநர்கள் வலப்பக்கத்தினால் வாகனத்தைச் செலுத்தும் போது பயணிக்கும் பாதசாரிகள் முதல் இடது பக்கத்தில் வாகனங்களை செலுத்திச் செல்லும் ஓட்டுநர்கள் வரை பலர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன் விபத்துக்கள் ஏற்படவும் காரணியாகவும் அமைகின்றன.

எனவே வீதியில் இடப்பக்கம் பயணத்தில் வலப்பக்கமாக பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படும்.

இரவு வேளைகளில் முகப்பு வெளிச்சமின்றி வாகனங்களை செலுத்துவோர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ச-4)

# ஒலிப்பேழை வெளியீட்டு விழா

(யாழ்பாணம்)

யாழ்பாணம் மத்திய கல்லூரி இந்து மன்றத்தின் அனுசரணையில் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராசா எழுதிய நல்லூர் கந்தன் பாமாலை ஒலி இசைத்தட்டு ஒலிப்பேழை வெளியீட்டு விழா இன்று காலை 11மணிக்கு யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பிரதிஅதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் வெளியீட்டுரையினை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார்

இசைத்தட்டு ஒலிப்பேழையினை பாமாலை ஆசிரியர் நா.வரதராசா வெளியீட்டு வைக்க முதற்பிரதியினை யாழ். வணிக கழகத் தலைவர் இ.ஜெயராசா பெற்றுக்கொள்வார். (ச-4)


ANNA INDUSTRY

அண்ணா கோப்பி

திருவிழாக்கால விற்பனை நிலையம்

நல்லூரில் நல்லை ஆதீனம் முன்பாக அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்தில் ரூபா 100 கொடுத்து அண்ணா தயாரிப்புக்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்வதோடு இனாம் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

(C-1581)

மிகவிரைவில்...



உங்கள் வலம்புரியில்

மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி

சி.நவநீதன் அவர்கள் எழுதும்

அன்புள்ள அம்மா

வாசிக்கத் தவறாதீர்கள்

இது கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் கட்டாயம் வாசிக்கவேண்டிய சுகநலக் குறிப்பு


# தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழைதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு பாட்டு வி.சி.ஞானசேகரம் வயலின் எம்.விஸ்வமூர்த்தி மிருதங்கம் கே. கஜன் முகர்சிங் எஸ் விமல்சங்கர் ஆகியோரின் இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ற-9)

## மட்டக்களப்பில் இராணுவம்....

தவிரமட்டக்களப்பு- வாழைச்சேனைவீதியில் நீதிபதிக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற பொலிஸ் வாகனம் மீது சந்தி வழியில் கைக்குண்டு வீசப்பட்டது.

இச் சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும் நேற்றுக்காலை நாவலடி-வாகரை வீதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களுக்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளார்கள் இச் சம்பவங்களினையடுத்து அப்பகுதியில் மேலதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-4,8,9)

# கிழக்கில் முஸ்லிம்...

நிர்வாகம் அளிக்கப்படுமென்ற உறுதிமொழியை ஜனாதிபதித் தேர்தலுக்கான முக்கிய கட்சி களின் வேட்பாளர்கள் அறிவிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த திங்கட்கிழமை சந்தித்து போது இக்கோரிக்கையை வலியுறுத்தினார்.

கோரிக்கை குறித்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துவதாக ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

தேவைப்படுமாயின் முஸ்லிம் பிரதிநிதிகள் அடங்கிய குழு ரணில் விக்கிரமசிங்கவுடன் இது குறித்துப் பேச்சுக்களை நடாத்தும்.

இதே நிபந்தனையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ முன்பும் வைக்கப்படுமென ஹசன் அலி மேலும் தெரிவித்தார். (ச)

## அமெரிக்க குழு...

பகுதியில் உள்ள முன்னரங்க படை நிலைகளை பார்வையிட்ட அமெரிக்க உயரதிகாரிகள் படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கருத்துப் பரிமாறல்களை நடத்தினர்.

தொடர்ந்து யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் சுனில் தென்னக்கோனுடன் கலந்துரையாடல்களை நடத்திய அமெரிக்க உயரதிகாரிகள் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலைபரம் குறித்தும் படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டனர் (ச-4)

## காணாமல்...

(வயது 28) என்பவரே அவ் இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வாகனேரி காட்டுப் பகுதியில் வாய்க்கால் ஓரத்தில் வீசிய துர்நாற்றத்தையடுத்து அங்கு சென்ற கிராமவாசிகளின் தகவலின் பேரில் இறந்தவரின் தந்தை ஆடைகளை வைத்து தனது மகன் என அடையாளம் காட்டினார்.

வாழைச்சேனை வைத்திய சாலையில் மரண விசாரணை. மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

# மரணஅறிவித்தல்

## திருமதி ஞானேஸ்வரி கனேசலிங்கம்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி கணேசலிங்கம் அவர்கள் 30.08.2005 செவ்வாய் இரவு கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நவரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு. கணேசலிங்கம்(**Product Manager,** இளந்தென்றல் வாணிபம் கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும் பாமினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி, சிவனேஸ்வரி, சற்குணநாதன்(**Printing Manager Lake House**), பரமநாதன்(**J.P** நிறைஞ்சனாஸ், நாதன்ஸ் சினிமா உரிமையாளர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், நாகபூஷணி, சிவானந்தன் (மகாராஜா நிறுவனம்), நவரத்தினம்(ஏலவிற்பனையாளர்), விஜயகுமாரி(அவுஸ்ரேலியா), யசோதரா, கமலாதேவி, தேவஞானி, கோமளவல்லி,சபாலிங்கம் (ஜேர்மனி), சங்கரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (01.09.2005) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்பு மன்னம்பெரி மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'நிறைஞ்சனாஸ்'
204, பொன்னாலை வீதி,
சங்கானை.

தகவல்
திரு.ந.பரமநாதன்
சகோதரன்(J.P)

(C-1632)

## ஜே.வி.பியுடன்...

வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்துத்தெரிவித்த விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்ரர் தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பாக அரசு பேசவிரும்பின் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தான் பேசவேண்டுமென்பது யதார்த்தமாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அல்லது ஐக்கியதேசியக்கட்சியோ வெற்றிபெறும் யாருடனும் எமது தேசியத்தலைமை அமைதிப்பேச்சுக்களை நடத்த தயாராக இருக்கின்றது.

இருப்பினும் ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ கைகோர்த்துள்ளது என்பது அமைதி முயற்சிக்கு எதிரானது.

ஜே.வி.பி-சுதந்திரக்கட்சி கூட்டணியின் கடந்த கால வரலாறுகள் இதைத்தான் நிரூபித்துள்ளன என தயா மாஸ்டர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-4)

## சன நெரிசலில்...

பக்தாத் நகரின் வடக்கே சியாதி புனிதத்தலம் ஒன்றை நோக்கி சுமார் 10 இலட்சம் பேர் தொழுகைக்காக ஒரு பாலத்தில் சென்று கொண்டிருந்த போது கூட்டத்தின் நடுவே தற்கொலை குண்டுதாரிகள் யாரோ வந்து விட்டார்கள் என்று பரவிய வதந்தியை அடுத்து ஏற்பட்ட நெரிசலில் இவர்கள் சிக்கி மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளனர். (04)

## நிபந்தனை...

அவர் இடை நிறுத்தப்பட்டால் ஜே.வி.பியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கும் சாத்தியமிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜே.வி.பியுடனான சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷவும் மங்கள சமரவீரவும், ஜே.வி.பியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச அநுரகுமார திஸாநாயக்க, ரில்வின்சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-4,8,6)

## ஆயுதங்களுடன்...

செல்லப்பட்டவை என விசாரணைகளின் மூலம் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் இரண்டு கொலைக் குற்றச்செயலுடன் தொடர்புடையவர்களென பொலிஸார் தெரிவித்தனர். (ச-8)


நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
சத்யராஜ், நமீதா நடித்த
இங்கிலீஷ்காரன்
(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
காதல் புகழ் பரத், ரேணுகா மேனன் நடித்த
பெப்ரவரி 14
கா.நே: 11.00 2.45 6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
புரட்சிக் கலைஞர் விஜயகாந், ரம்யாகிருஷ்ணன், சாக்ஷி, பிரகாஷ்ராஜ் நடித்த
வாஞ்சிநாதன்
(சில தினங்கள் மட்டும்)
கா.நேரம்: 10.30;2.30;6.30;9.30
அடுத்த வெளியீடு
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டிஜெயா


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.